T04181
R001J06

உ

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடி

# மாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

னாவெண்பாமூலம், கொடிக்கவிமூலம்.

# உண்மைநெறிவிளக்க

மூலமும் உரையும்.

---

இஃது,

காஞ்சிபுரம்

மகாவித்வான்

**கந்தசாமிமுதலியார்**

மாணாக்கர்

**கா. சுந்தரமூர்த்திமுதலியார்**

அவர்கள் பார்வையிட்டு,

கன்னிகைப்பேர்

**முருகேச முதலியாரால்**

சென்னை

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898௵

418

உ

திருச்சிற்றம்பலம்.

# வினாவெண்பா.

## மூலமும் உரையும்.

---

நீடொளியு நிறையிருளு மோரிடத்துக்
கூடலரிது கொடுவினையேன் - பாடி. தன்மு
னொன்றவார்சோலை யுயர்மருதச்சம்பந்தா
நின்றவா றெவ்வாறுநீ

இ - ள். நீடொளியு நிறையிருளு மோரிடத்துக் கூடலரிது-விரிந்தபிரகாசமு நிறைந்தவிருளு மோரிடத்திலே கூடமாட்டாது—கொடுவினையேன்பாடித்தன்முன்-கொடுவினையேன்பக்கற் றெரிசிப்பதற்கு முன்பு,—வார்சோலையுயர்மருதச் சம்பந்தா வொன்றிநின்றவா றெவ்வாறுநீ-அழகியசோலையுயர்ந்த மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே யடியேனிடத்துத்தேவரீர்பொருந்திநின்றதெப்படி - (கருத்து) அந்தகன்கண்ணுக்கு ஆதித்தப்பிரகாசம் வியாத்தமா யிருக்கையிலேயுந் தெரியாதிருந்த தன்மைபோலென்பதாம். உ-ம். சிவஞானபோதத்தில். "அருக்கனேர்நிற்பினு மல்லிருளேகாணார்க் கிருட்கண்ணேபாசத்தார்க்கீசன்" கண்டு கொள்க. (நுட்பம்) மலமான்மாவைச் சகசமாய் மறைத்திருக்கையிலே சிவமான்மாவைப்பொருந்தி நின்றதெப்படியென்னும் வினாவுக்கு உ-ம் சிவஞானபோதத்தில். "மெஞ்ஞானந்தன்னில் விளையாத சத்தாதல்" என்றபாடத்திலும். சிவதருமோத்தரத்தில் பரமசிவன் பராசத்திபல்லுயிர்க்கும் பயின்றிருக்க,விரவுவதெனிருளெனிற்கேள் வெய்யவழற் பசுமரத்தின், விரவியதே பசுமரமும் வெந்தலை வெந்துவிழும், பருவமுறக் காணமுறப் பதியுமுறப் பழுதறவே. " என்பது கண்டுகொள்க. (க)

இருளிலொலிபுரையு மெய்துங்கலாதி
மருளினிலையருளு மானுங் - கருவியிவை

நீங்கினிருளா நிறைமருதச்சம்பந்தா
வீங்குணருளா லென்பெற.

இ - ள். இருளிலொளிபுரையும்-ஆணவமேலிட்டகாலத்து ஞானமொழிந்துநிற்கும்,—எய்துங்கலாதிமருளினிலையருளுங்காலாதிகளைப் பொருந்தின விடத்திலுமாணவத்தையேநந்து,—மானுங்கருவி யினைநீங்கினிருளாம் - என்னுடனே கூடிநின்ற கருவி நீங்கின பொழுது இருளாயிருந்தது,—நிறைமருதச்சம்பந்தா வீங்குணருளாலென்பெற-நிறைந்தமருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே யிவ்விடத்துன்னருளாற்பிரயோசனமென்ன - (க-து.) கேவலசகலத்திலுமல்ல சுத்தத்திற் பிரயோசனமென்பதாம் உ-ம். சிவப்பிரகாசத்தில். "காட்டிடுங் கரணமொன்றும்" என்றபாடத்திற் கண்டுகொள்க. (உ)

புல்லறிவுநல்லுணர்வ தாகாபொதுஞான
மல்லதிலதுள்ளதெனி லந்நியமாந் - தொல்லையிரு
ளூனமலையாவா றுயர்மருதச்சம்பந்தா
ஞானமலை யாவாய்நவில்.

இ - ள். புல்லறிவு நல்லுணர்வ தாகாபொதுஞான மல்லது சிற்றறிவுபேரறிவாகாதுஞானமல்லதுபொதுஞானமூன்றுவிதமாயிருக்கும்,—இலதுள்ள தெனிலந்நியமாம்-முன்பில்லாத சிவஞான மலபரிபாகத்திலே யுண்டாமென்னில் சற்காரியவாதமாகாமலந்நியமாம்,—தொல்லையிருளூன மலையாவாறுயர்மருதச்சம்பந்தா ஞானமலையாவாய் நவில்-பழமையாகவருகிறஆணவமலத்தின்குற்றத்தினாலே மயங்காத முறைமையையுயர்ந்த மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே மலைபோல ஞானத்தையுடையவரேதிருவுளம்பற்றவேணும். (க-வது.) ஆன்மஞானம் சிவஞானமாகாது.தத்துவங்களுடைய சுபாவத்தை இதுபொய்யென்றறிவிக்கிறது சிவஞானம் இப்படியறிகிற வேற்றுமையும் விட்டு வாய்ந்த ஞானமாய்நிற்பது சுத்தம். உ-ம்.சிவப்பிரகாசத்தில் "தத்துவமானவற்றின்றன்மைகள்" என்றபாடத்திலும,சிவஞானசித்தியில், "சிவன்

சிவனென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற் சிவனருட் சித்தி வனருளைச் சேருஞ்சித்து. கண்டுகொள்க. (௩)

கனவுகனவென்று காண்பரிதாங்காணில்
நனவிலவைசிறிது நண்ணு - முனைவனரு
டானவற்றிலொன்று தடமருதச்சம்பந்தா
யானவத்தை காணுமாறென்.

இ - ள். கனவுகனவென்று காண்பரிதாம்-கனவிலேநின்றுகனவைத் தரிசிக்கப்படாது,—காணில்நனவிலவை சிறிதுநண்ணு நனவிலே காணும் கண்டதென்னில் நனவிலந்தக்கருவிகளில்லாதபடியினலே காணவில்லை,—முனைவனருடான வற்றிலொன்று அருளிலே நின்றுகண்டதென்னிலரு ளவத்தைகளிற்பொருந்தாது,—தடமருதச்சம்பந்தா யானவத்தைகாணுமாறென்-தடாகம் பொருந்திய மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியேநானவத்தைகளைத்தரிசிக்கும்படி யெப்படி. (க-து.) சுத்ததத்துவங்களைக்கொண்டறியவேணுமென்பாம். உ-ம், சிவப்பிரகாசத்தில் இத்தகைமை யிறையருளா லுயிரறியும்" என்றபாடத்திற்கண்டுகொள்க. (௪)

அறிவறிந்ததெல்லா மசத்தாகுமாயின்
குறியிறந்தநின்னுணர்விற் கூடா - பொறிபுலன்க
டாமாவறியா தடமருதச்சம்பந்தா
யாமாரறிவா ரினி.

இ - ள். அறிவறிந்ததெல்லா மசத்தாகுமாயின்-என்னுடையவறிவினலே யறியப்பட்டதெல்லா மசத்தாயழிந்து போமேயாயின்,—குறியிறந்த நின்னுணர்விற்கூடா—வாக்குமனத்துக்கெட்டாமல் குறியிறந்து நிற்கிற தேவரீருடைய ஞானத்திலே பொருந்தப்போகிறதே யில்லை,—பொறிபுலன்கடாமாவறியா-பொறிபுலனாகிய தத்துவங்கள் தாமாயறியமாட்டா,—தடமருதச்சம்பந்தா யாமாரறிவாரினி-தடாகம்பொருந்திய மருதநகர்வாழ் சம்பந்தமா

இ - ள். இருமலத்தார்க் கில்லை யுடல்வினையென் செய்யும் இரண்டு மலமுடைய பிரளயாகலருக்குமாயையில்லாத படியினாலே உடம்பில்லை வினைபொசிக்கும்படியெப்படி,— ஒருமலர்தார்க்காராயுரைப்பேன்-ஒருமலமுடைய விஞ்ஞானகலருக்குரையாராகச்சொல்லுவோம்,— திரிமலத்தா ரொன்றாகவுள்ளார்-மூன்றுமலமுடைய சகலருக்கல்லோ வொன்றாகவுள்ளது.—உயர்மருதச் சம்பந்தாவன்றாகிலாமாறருள்-உயர்ந்தமருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே யப்படியல்லவாகி லாமாறருள். (க-து )விஞ்ஞானகலர் பிரளயாகலர்க்குச்சுத்தமாயையிலேதேகமென்பதாம். உ-ம சிவஞானசித்தியாரில். “வித்தைகளவித்தையீசர் சதாசிவரென்றிவர்க்கு“ என்றபாடத்திற்கண்டுகொள்க. (௬)

ஒன்றிரண்டாய்நின் றொன்றி லோர்மையதாமொன்றாக
நின்றிரண்டாமென்னி லுயிர் நேராகுந் - துன்றிருந்தார்
தாங்கியவாழ்தண்கடந்தைச் சம்பந்தாயானாகி
யோங்கியவா றெவ்வா றுரை.

இ - ள். ஒன்றிரண்டாய் நின்றொன்றி லோர்மையதாம்-ஒருபொருள் விவகாரத்திலே யிரண்டாய் நின்றொன்றாமென்னில் ஒன்று பொருந்தமாட்டாது,—ஒன்றாகநின்றிரண்டாமென்னிலுயிர் நேராகும்-இரண்டாய் நின்றொன்றாமென்னிலொன்றிலே யொன்றழிந்துபோம்,—துன்றிருந்தார் தாங்கியவாழ்தண்கடந்தைச் சம்பந்தாயானாகி யோங்கியவா றெவ்வாறுரை-ஞானத்தைப்பொருந்தின பெரியோரால் தாங்கிவாழப்பட்டகுளிர்ந்த கடந்தைநகர்வாழ் சம்பந்தமாமுனியேயான் சிவமாகியோங்கினமுறைமையைத் திருவுளம் பற்றவேணும். க-து. ஆணவத்தைப்பொருந்தின வான்மாவைப்போல வென்பதாம். உ-ம். சிவப்பிரகாசத்தில். “ஒன்றிரண்டாகி யொன்றிரொருமையாம்“ என்ற பாடத்திற் கண்டுகொள்க. (௭)

காண்பானுங்காட்டுவதுங் காண்பதுவுநீத்துண்மை
காண்பார்கணன்முத்தி காணார்கள் - காண்பானுங்
காட்டுவதுங்காண்பதுவுந் தண்கடந்தைச்சம்பந்தன்
வாட்டுநெறி வாராதவர்.

இ - ள். காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை காண்பார்கள்-காண்கிறவான்மாவுங் காட்டுகிற சிவனுங்காணப்படுகிற பொருளையும்விட்டுண்மையைத் தரிசிப்பார்களென்னில்—நன்முத்திகாணார்கள்-நல்லமுத்தியைக்காணார்கள்—காண்பானுங்காட்டுவீதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்வாட்டுநெறிவாராதவர்-ஆனால் காணுகிறவனுங் காட்டுகிற னுங்காணப்படுகிற பொருளுமாகவோ காண்பார்களென்னில்அப்படிக் காணுகிறவர்களுங் குளிர்ச்சிபொருந்தின கடந்தைநகர்வாழ் சம்பந்தமாமுனி வாட்டும்வழி வாராதவர். க-து. ஞாதுருஞான ஞேயமென்கிற சங்கற்பனைகளைவிட்டு ஒன்றாகச் சிவனியல்பினுணருகிற ஞானமே பெறவேணுமென்பதாம். உ-ம். சிவஞானசித்தியில் சன்மார்க்கஞ் சகலகலைபுராணவேதஞ்சாத்திரம்" என்ற பாடத்திற் கண்டுகொள்க. (௰௧)

ஒன்றினுகர்வதிவ னானுமுறுதொழிலு
மென்றுமிடையி லிடமில்லை - யொன்றித்
தெரியாவருண்மருதச் சம்பந்தா சேர்ந்து
பிரியாவா றெவ்வாறு பேசு.

இ - ள். சர்வவியாபியாயிருக்கையிலேயுந் தோன்றாத கிருபைபொருந்திய மருதநகர்வாழ் சம்பந்தமாமுனியே தேவரீர்திருவடியைச் சேர்ந்து பிரியாமற் போகங்களைப் புசிக்குமுறைமைதிருவுளம்பற்றவேணும். க-து. அவன்சர்வவியாபியாகையினாலும்இவன் சுதந்தரஹீனனாகையாலும் அவனே போகங்களைப் புசிப்பிக்கிறவ னென்பதாம். உ-ம்திருவருட்பயனில், "அவனையகன்றெ

ங்கின்று மாங்கவனுமெங்கு. மிவனையொழிந் துண்டார்தலில் "சிவஞானபோதத்தில், " ஈண்டிவ்வான்மாக்க ளவனையன்றியமைந்தொன்றையும் விஷயியாவாகலானவனுமவற்றதிவிஷயத்தையுணருமென்றும். உண்மைநெறிவிளக்கத்தில். * பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவுகள்ளு" என்றபாடத்தினுங்கண்டுகொள்க.

அருளாலுணர்வார்க் ககலாதசெம்மைப்
பொருளாகிநிற்கும் பொருந்தித் - தெருளா
வினாவெண்பாவுண்மை வினாவாரே லூமன்
கனாவின்பாலெய்துவிக்குங் காண்.

இ-ள். அருளாலுணர்வார்க் ககலாதசெம்மைப் பொருளாகிநிற்கும்பொருந்தி-ஆசாரிய னநுக்கிரகம்பெற்ற ஞானவான்களுக்கு விட்டுநீங்கி மலைவுவராமல் செம்மைப்பொருளாகவேபொருந்திநிற்கும்,—தெருளாவினாவெண்பா வுண்மை வினாவாரேலூமன்கனாவின்பா லெய்துவிக்குங்காண்-அறியத்தக்கதாக வினாவெண்பாவி னுண்மையை வினாவி யறியாதபேர்ஊமன்கனாவிலேபால்குடித்ததுக் கொக்கும். (க-து.) ஞானமிகுதியுடையோர்க்குச்சத்தியமாகவே தோன்றும். அல்லாதபேர்எத்தனை சாத்திரம்படித்தாலும் வினாவெண்பாப்பாராராயின்ஊமன் கனாவினாலே பால் குடித்ததுபோல் ஒன்றுந்தெரியாதென்பதாம்.

வினாவெண்பா மூலமும் உரையும் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

இவ்வுரை சகாத்தம் ௧௬௱-க்கு மேற்செல்லாநின்ற பிங்கள ௵ வைகாசி௴ மெய்கண்டசந்நிதியில் திருவாவடுதுறைநமச்சிவாயமூர்த்தி மரபில் வேலப்பபண்டாரமநுக்கிரகம்பெற்றநமச்சிவாயத் தம்பிரான் செய்ததெனவறிக.

உ

திருச்சிற்றம்பலம்.

# கொடிக்கவி

## மூலமும் உரையும்

ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிட மொன்றுமேவி
டிலொன், றொளிக்குமெனினு மிருளடராதுள்ளுயிர்க்
குயிராய்த், தெளிக்குமறிவுதிகழ்ந் துளதேனுந்திரிமலத்
தே, குளிக்குமுயிரருள் கூடும்படிக்கொடி கட்டினனே.

இ-ள். ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிடம்-ஆணவத்துக்கு ஞானத்துக்கு மிடமொன்றே—ஒன்று மேவிடிலொன்றொளிக்கும்-ஞானமேவிட்டகாலத் தாணவமொளித்துநிற்கும். ஆணவமேவிட்டகாலத்து ஞானமொளித்துநிற்கும்,—எனினுமிருளடராது ஒன்றுமேவிட்டகாலத்திலே யொன்றொளித்து நின்றாலு ஞானத்தையாணவமலம் பொருந்தாது,—உள்ளுயிர்க்குயிராய்த் தெளிக்கு மறிவுதிகழ்ந்துளதேனுந் திரிமலத்தேகுளிக்கும்-பூர்வவாசனைவிசேஷத்தாற் சிவஞானஞ் சற்றுவிளங்குமானாலு மும்மலங்களிலேமூழ்கிக்கிடக்குமல்லாம லதுகொண்டே நீங்கமாட்டாது—உயிரருள்கூடும்படிக்கொடி கட்டினனே-இப்படி மும்மலங்களிலே மூழ்கிக்கிடக்கிறவான்மா வருள்கூடும்படிக்குத் தீக்ஷாக்கிரமத்தினாலே மலங்களைப்போக்கத் துசங்கட்டினேன். (கருத்து) ஆணவத்துக்கு ஞானத்துக்குமிடமொன்றாயிருக்கத்தனதுகாரணங்கெடாமலிருக்கிற மலத்தைத் தீக்ஷாக்கிரமத்தினாலேபோக்கி மோக்ஷத்தை யடைவிப்போமென்பதாம். (நுட்பம்) ஆணவத்துக்கு ஞானத்துக்கு மிடமொன்றென்பதற்கு. உ-ம். சிவஞானபோதத்தில், மெய்ஞ்ஞானந்தன்னில்"என்றபாடத்தில், தண்கடனீருப்பு

ப்போற்றுனேயுள்முளவாய்த்தான்." எ-து. கண்டுகொள்க. ஒன்றுமேவிட்டகாலத்திலேயொன்றேளித்துநிற்குமென்றதற்குஉ-ம் சிவப்பிரகாசத்தில். "மாயைமாமாயைமாயா."என்றவிருத்தத்திற் கண்டுகொள்க. இதல்லாமலாணவமேவிட்டபெத்தகாலத்திலே ஞானமொளித்து நிற்குமென்று முத்திகாலத்திலே சிவம்பிரகாசித்து ஆணவங் கௌரவங் கெட்டொளித்து நிற்குமென்றுங்கூறியதற்கு, உ-ம். போற்றிப்பஃறொடையில். "என்ற, னுள்ளமென்ற நீங்காதொளித்திருந்துதோன்றிநின்ற, கள்ளமின்று காட்டுங்கழல்போற்றி." சிவஞானபோதத்தில். "நேசத்தர்தன்பாணிக்கூர்ந்ததிநெய்போற் பாசத்தர்க்கின்றாம்பதி." எ-ம். வருமேதுக்களைக்கண்டுகொள்க. ஞானத்தை யாணவம்பொருந்தாதென்பதற்கு. உ-ம். சிவஞானபோதத்தில். "அங்ஙியமிலாமையாற் சொன்றுணர்வின்றாம்." என்றபாடத்திற்சூரியனையந்தகாரம்பொருந்தாமைநிற்கும். எ-து. கண்டுகொள்க. முன்விட்டகுறைவினாலே யுயிர்க்குயிராயிருக்கிற ஞானஞ் சற்று விளங்குமானாலு மலத்திலேயழுந்திக்கிடக்கு மல்லாமல் நன்றாகச் சத்தியாகாது. இப்படியிருக்கிறவான்மாவருளைக்கூடும்படித் துசங்கட்டினே னென்றதற்கு ஆசாரியர் தீக்ஷாகிரமத்தினாலே மலத்தைப்போக்கிஅருளைக்கொடுப்பர். அந்தச்சிவஞான மாசாரியரையல்லாமல்வாராது. உ-ம். சிவப்பிரகாசத்தில். "விரும்பிய மந்திராதிகாரம்."என்றவிருத்தத்திலும். சித்தியாரில். "பலவிதமாசான்பாசமோசனந்தான் பண்ணும்படி"எ-ம்"ஆசானருளாலடிசேர்ஞானம்வந்திடுமற்றொன்றாலும் வாராதாகும்."எ-ம். கண்டுகொள்க.

பொருளாம்பொருளேதுபோதேதுகண்ணோ
திருளாம்வெளியேதிரவே - தருளாளா
நீபுரவாவையமெலாநீயழியக்கட்டினேன்
கோபுரவாசற்கொடி.

இ-ள். பொருளாம்பொருளேது-பொருளிலேயழியாதபொ
ருளேது—போதேது-கிரணமாகியசத்தியேது—கண்ணேது-கண்
போலவான்மாவேது-இருளாம்வெளியேதிரவேது-அஞ்ஞானமா
கிய சகலகேவலந்தானேது—அருளாளா-அருளையுடையவனே-நீ
புரவாவையமெலா நீயறியக்கட்டினேன்-வையமாகிய மலமாயா
திகன்மங்களிலே பொருந்தாமல் ஆன்மாக்களிடமாகப்பொருந்தி
யிருக்கிற தேவரீரறியக்கட்டினேன். கோபுரவாசற்கொடி-கோ
புரவாசலிலேகொடி.(க-து.) கத்தாவேது, சத்தியேது, ஆன்மா
வேது. கேவலசகலமேது இதுசொல்வாருமுளரோவென்றுகொ
டிகட்டினேனென்பதாம்(நு-ம்.)அழியாதபொருளேதென்னிலெ
ன்றது அகண்டபரிபூரணமா யுயிர்க்குயிராயாநந்தரூபமா யிருக்
கிறது தற்சிவம். அதற்கு. உ-ம், சிவப்பிரகாசத்தில். “பலகலையா
கமவேதம் யாவையினும்” என்ற விருத்தத்திற் கண்டுகொள்க கி
ரணவொப்பாகிய சத்திதானேதென்னில் சத்தியென்று தனியே
யொருமுதலல்ல சூரியனுங்கிரணமும்போல மரமுங்காழ்ப்பும்
போலத் தடையற்ற ஞானமா யிருக்கும். உ-ம், சிவப்பிரகாசத்
தில். சுத்தமாஞ்சத்திஞானச்சுடராகும்” என்றபாடத்தில் “இரவி
காட்டும் வளரொளிபோன்மகிழ்ந்தே” எ-ம், சித்தியாரில் “சத்தித
ன்வடிவேதென்னிற் றடையிலா ஞானமாகும்” எ-ம் “ஒருவனேயி
ராவணுதி’ என்றபாடத்தில் “வரும்வடிவெல்லாஞ்சத்தி சத்திதா
ன் மரமுங்காழ்ப்பு மிருமையும்போல்மன்னிச்சிவத்தினோடிசை
ந்து நிற்கும்” எ-ம். கண்டுகொள்க. கண்ணொப்பாகிய வான்மாவே
தென்னில் அதுவதுவாய் அடுத்ததின்றன்மையாய் வசிப்பைப்
பற்றின வியாபகமாய்க்கண்படிகமாகாயம்போலஒப்பையுடைய
தாய் அக்கினியைப்போல வொன்றைப்பற்றி நிற்கிறதல்லாமற்
றனித்துநிற்கிற முதலல்லவாய் அருவமுருவமும் ரூபாரூபமல்ல
வாய்ப்பூவிற் கந்தம்போன்றதாயிருக்கிறதான்மா இதற்கு. உ-ம்
சிவஞானபோதத்தில். “மாயாதனுவிளக்காய்மற்றுள்ளம்” என்ற
பாடத்திலும், சிவப்பிரகாசத்தில்.“ ஓரிடத்திருத்தல்.” என்றபா

டத்திலும். சித்தியாரில்,"அசித்தருவியாப்கம்போல்வியாப்ஷமரு வமன்ருய், வசித்திடவரும் வியாபியெனும் வழக்குடையனுகி, எ-ம். திருவருட்பயனில்" இருளிருளாகி யெல்லிடத்திலெல்லாம் பொருள்களிலதோபுவி""எ-று. சித்தியாரில்" அங்கியானதுதானு மொன்றை யுணர்ந்துநின்று திகழ்ந்திடும். பங்கியாதுயிர்தானு மிப்படிபற்றியல்லது நின்றிடா" எ-ம்.சிவஞானபோதத்தில்"தோ ன்றல்மலர்மணம்போற்றெக்கு" எ.ம்,வருமேதுக்களைக் கண்டு கொள்க அஞ்ஞானமாகிய கேவலசகலந்தானேதென்னில் அதிற் கேவலமாவது தத்துவங்களோடே பொருந்தாமற் போகத்திற் கொள்கையில்லாதவனும் அறிவில்லாதவனும் அந்தகாரத்திலே அலரவிழித்த விழிபோன்றதாய் மலமொன்றுமே யாயதுவாயந் தமலமாய் விட்டுநீங்குமுறைமை யில்லாததாயிருப்பதுகேவலம். இதற்கு, உ-ம், சிவப்பிரகாசத்தில். ஓங்கிவரும்பலவுயிர்கள். "எ ன்றபாடத்திலும். சித்தியாரில். "அறிவிலன் மூர்த்தனித்தனரா காதிகுணங்களோடும், "என்றபாடத்திலும் வருமேதுக்களைக்க ண்டுகொள்க. சகலமாவதேதென்னில் சகலத்துக்கு வெளியென் றுந் தீபமென்றும்பெயர். வெளி தீபமென்றிருக்கிறசகலத்தைய ஞ்ஞானமென்று சொல்லுவானே னென்னில்சகலத்திலே அஞ்ஞா னமாகிய மாயாபோகத்தைப் புசிப்பிக்கு மல்லாமல் ஞானத்தை யுணர்த்தாது. ஞானஞ்சுத்தத்திலே யல்லாமலுண்டாகாது. ஆ கையால் சகலமும்போகத்தைப் புசிப்பிக்கிற நிமித்தமாகக்கேவ லத்துக்கு இது தீபமென்றும். வெளியென்றுஞ்சொன்னதல்லாம ல்இதுவு மஞ்ஞானமே தப்பாது இதற்கு உ-ம்சிவப்பிரகாசத்தில் புகலுமலமொழித்தற்கு. "என்றபாடத்திலும்.இருபாவிருப ஃதில் இருள்வெளியாக்கு மருளினையறுத்து, "எ-ம். வருமேதுக்களைக்க ண்டுகொள்க. அருளாளாவென்றது அறிவுடையவனேயென்றது. நீபுரவாவையமெலா நீயறியக்கட்டினேனென்றுதேதென்னில் ச ர்வத்திர பரிபூரணனுயிருக்கிறவர் பிரபஞ்சமாகிய மலமாயாதிக ன்மங்களைப்பொருந்தாமலான்மாக்களிடமாக விருப்பாரென்று

சொல்லுவானே னென்னில் சிவனை மலமாயாதி கன்மங்கள்பொருந்தாது. ஆனால் சர்வவியாபக மெப்படியென்னில், சூரியனுடையசந்நிதியி லந்தகாரம் பொருந்தாமல் நிற்கிறதுபோல மலமுஞ்சிவன்சந்நிதியிலே நிற்கிறது, அப்படி சிவ னான்மாக்கள்தோறு நிறைந்திருக்கச் சிவனை பொருந்தாமலான்மாக்களை மலம்பொருந்தினதெப்படியென்னிற் சமுத்திரமும் ஜலமுமுப்பும்போல, இதற்கு உ-ம், நெஞ்சுவிடுதூதில். "படநாகம்பூண்ட பரமன்பசுவினிடமாய் நிறைந்தவிறைவன்," எ-ம். சித்தியாரில். "அனைத்துஞ்சத்தென்னி லொன்றையறிந்திடா தசத்தாலென்னில், முளைத்திடா தசத்துசத்தின் முன்னிருளிரவிமுன்போல், நினைப்பதிங்கசத்தேயென்னிற் சத்தின்முன்னிலாமையானுந், தனைக்கொடொன்றுணர்தலானுந் தானசத்துணராதன்றே. எ-ம். "சுத்தமெய்ஞ்ஞானமேனிச் சோதிபாலசத்தஞ்ஞான, மொத்துருகுற்றமெல்லாமுற்றிடுமுயிரின்கண்ணே. சத்துளபோதேவேறுஞ்சதசத்துமசத்துமெல்லாம். வைத்திடுமநாதியாக வாரிநீர்லவணம்போலும்." எ-று வருமேதுக்களைக்கண்டுகொள்க. தேவரீரறியக்கோபுரவாசலிலே கொடிகட்டினேனென்பதற்கு அந்தக்கத்தாவேகன்னபரம்பரையாக அநுக்கிரகம்பண்ணி அறிகிறதல்லாமல் மற்றப்பேராலேஅறியப்படாதென்பதுகருத்து. (உ)

வாக்காலுமிக்கமனத்தாலுமெக்காலுந்
தாக்காவுணர்வரியதன்மையனை - நோக்கிப்
பிரித்தறிவுதம்மிற்பிரியாமைதானே
குறிக்குமருணல்கக்கொடி.

இ-ள். வாக்காலுமிக்க மனத்தாலுமெக்காலுந் தாக்காவுணர்வரியதன்மையனை வாக்குமனதுக்களாலு மொருகாலத்தினுந்தாக்காமலறிவதற் கரிதாகிய தன்மையுடையவனை—நோக்கி-விசாரித்துப்பார்த்து,—பிரித்து-பகுக்குமிடத்து,—அறிவுதம்மிற்பிரியாமைதானே குறிக்குமருணல்கக்கொடி-அறிவுக்கறிவாயிருக்கிறசி

வத்தைப் பிரியாமற் குறித்து மருள்பொருந்தத் தக்கதாகக்கொடி கட்டினேன். (ரு-ம்) மனவாக்குக் காயங்களினுலே யொருகாலு ந்தாக்காதவனென்றும், ஆன்மபோதத்தாலறியப்படாதவனென்று ஞ்சொன்னதற்கு. உ-ம், சித்தியாரில், "மறையினுலயனுல்மாலால்ம னத்தினுல்வாக்கால்மற்றுங்குறைவிலாவளவினுலுங்கூ-ெருணுவா கின்ற விறைவனுர்" எ-ம், சிவப்பிரகாசத்தில், "பாசமாஞானத் தாலும் படர்பசுஞானத்தாலு மீசனையறியவொண்ணு" எ-ம், வரு மேதுக்களைக் கண்டுகொள்க. விசாரித்துப்பகுக்குமிடத்தி லென் றதுஇப்படி மனவாக்குக்காயங்களுக்கும் ஆன்மபோதத்துக்கு மெட்டாத சிவனை ஆசாரியர் தீக்ஷாக் கிரமங்களினுல் மலமாயா திகன்மங்களைப் போக்கிப் பசுகரணங்களைச் சிவகரணமாக்கிமல த்திலே பற்ருகவிருந்த வறிவைத்திருப்பி யருளிலேபற்ருக்கியெ ன்றதற்கு, உ-ம், நெஞ்சுவிடுதூதில், "பார்த்தான் பழையவினைப ஞ்சமலக்கொத்தை யெல்லாம், நீத்தான் நினைவுவேருக்கினுன் எ-து, கண்டுகொள்க, அறிவுதம்மிற் பிரியாமைதானேகுறிக்கு மென்றது இப்படி மலங்களைப்போக்கி அறிவை யருளிலேதிருப் பினவாசாரியருடைய வநுக்கிரகத்தினுலேஞாதுருஞான ஞேயங் களாகிய சங்கற்பனை ஞானங்களிலேபோகாமல்தன்னிடத்திலே உயிர்க்குயிரா யநாதியேதோன்ருமற் பொருந்தியிருக்கிற திருவ ருளிலே அறிவுதாரமாக நிறுத்தி யென்றதற்கு, உ-ம். சித்தியாரி ல், "ஞாதுருஞானஞேயஞ் சங்கற்பனைஞானமாகும் திருஞானமி வையெல்லாங் கடந்த சிவஞானமாதலினுற் சீவன்முத்தர்சிவமே கண்டிருப்பர்," என்பது கண்டுகொள்க, அருணல்கக்கொடி எ ன்றது இப்படி யாசாரிய ரநுக்கிரகம்பெற்ற அநுட்டானத்தினு லே சிவனுன்மாவைவந்து கவளீகரித்துக் கொள்ளுவனென்றும் இந்த முறைமையிலே யல்லாமல் மோக்ஷமடையப்படாதென்று ங்கொடிகட்டினேமென்பது கருத்து அருள்பொருந்துமென்றி ருக்கச் சிவன்கவளீகரிப்பவனென்று சொல்லுவானேனென்னில் அருளென்றுஞ் சிவமென்றும் வேற்றுமையில்லையென்றது, ஆன்

மாவைச்சிவன்கவளீகரித்த தெப்படியென்னில் இரசகுளிகை பொன்னைத் தனக்குள்ளே யடக்கிக்கொண்டது போலவும், தாருக்கினதெப்படியென்னில் அக்கினியிரும்பைத் தாருக்கினது போலவும், சிவனான்மாவை வகித்துவிடாத தெத்தன்மையென்னில்காந்தமிரும்பைவகித்தால் ஒருகாலும் விடாது அத்தன்மை போலவும், சிவனான்மாக்கள் மலத்தைப்போக்கித் திருவடியிலே கூட்டினதெப்படியென்னில் அக்கினி காட்டகத்தைக் கெடுத்தது போலவும் சூரிய னந்தக்காரத்தைப்போக்கினது போலவும்மலத்தைப்போக்கி, உப்பையணைந்த வப்பைப்போலவொன்றுபட்டுத்திருவடியிலே கலந்திருப்பது. ஆன்மா சிவனைப்பொருந்திச் சிவனாய் நீங்காம லிருக்கிறதெப்படி யென்னில் குளத்திலே கட்டுப்பட்ட தண்ணீரணையை முறித்துக்கொண்டு சமுத்திரத்திலே சேர்ந்தபோதந்தச் சமுத்திரசலமேயா யந்தச் சமுத்திரத்தைவிட்டு நீங்காத முறைமைபோல ஆன்மா சிவனைப்பொருந்திச் சிவமேயாய்ச் சிவனைவிட்டு நீங்காமற் சிவனுடைய திருவடியிற்கலந்துகிடக்கிறது மிந்த முறைமைத்து. இதற்கு. உ-ம். சித்தியாரில். "இரும்பைக்காந்தம் வலித்தாற்போல்,, என்ற பாடத்திலும். சிவஞானபோதத்தில் "மன்னுமிருளைத்துந்து.,, என்றபாடத்திலும் "நசித்தொன்றினுள்ளம்,, என்ற பாடத்திலும். "சிறைசெய்யநின்ற,, என்ற பாடத்திலும் வருமேதுக்களைக் கண்டுகொள்க. (௬)

அஞ்செழுத்து மெட்டெழுத்துமாறெழுத்துநாலெழுத்தும், பிஞ்செழுத்துமேலைப் பெருவெழுத்து - நெஞ்சழுத்திப், பேசுமெழுத்துடனே பேசாவெழுத்தினையுங் கூசாமற்காட்டக்கொடி.

இ-ள். அஞ்செழுத்து மெட்டெழுத்துமாறெழுத்து நாலெழுத்தும்-சிவாயநமவென்கிற வைந்தெழுத்தும். ஓம்-ஆம்-அவ்வும்-சிவாயநமவென்கிற வெட்டெழுத்தும் ஓம்நமசிவாய வென்கிற ஆ

றெழுத்தும் ஓம்-சிவாயவென்கிறநாலெழுத்தும்ஆகவிப்படி உச்ச
ரிக்கிற விதிப்படியே யுச்சரித்து, —பிஞ்செழுத்து மேலைப் பெ
ருவெழுத்தும் நெஞ்சழுத்தி - விதிப்படி யுச்சரிக்கிற முறை
மையை விட்டுப் பஞ்சாக்ஷரத்தி னுடைய சொரூபத்தை ய
றிந்து பிஞ்செழுத் தாகிய வகாரமாகிய பராசத்தியையும் மே
லைப் பெருவெழுத்தாகிய சிகாரமாகிய சிவத்தையுந் தன்னு
டைய ஹிருதயத்திலே வைக்கில், —பேசுமெழுத்துடனே பே
சா வெழுத்தினையுங் கூசாமற் காட்டக்கொடி - பேசுமெழு
த்தாகிய வகாரமாகிய சத்தி பேசா வெழுத்தாகிய சிகாரமாகிய
சிவத்தை யிரண்டறக் கூசாம லழுத்தி விக்கக் கொடிகட்டி
னேன். (க-து.) பஞ்சாக்ஷர முதலாகிய மந்திரங்களை யுச்சரி
த்து அதின் பிறகு அந்த மந்திரத்தினுள் அக்ஷர சொரூபத்தை
யறிந்து சத்தி சிவான்மீகமாயிருக்கிற அக்ஷரத்தை ஹிருதயத்தி
லே வைத்தால் அந்தச் சத்திதானே சிவனை யிரண்டறக் கலப்பி
ப்பளென்று பஞ்சாக்ஷரத்தினாலே மோக்ஷத்தை யடையும்படி
க்குக் கொடிகட்டினேன் என்பதாம். (நு-ம்.) அஞ்செழுத்து
மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும் பிஞ்செழுத்துமே
லைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்தி - பஞ்சாக்ஷர முச்சரிக்கிற
முறைமையிலே தூலபஞ்சாக்ஷரம் சூக்குமபஞ்சாக்ஷரம் அதி
சூக்கும பஞ்சாக்ஷரமென்று உச்சரிக்கிற முறைமை மூன்றுவித
முண்டு அந்த முறைமை யுச்சரித்து அந்தப் பஞ்சாக்ஷரத்தினு
டைய சுபாவமறிந்து (அதுவேதென்னில் சிகாரஞ் சிவம் வகார
ஞ் சத்தி யகாரமான்மா நகாரந் திரோதை மகாரமலம் ஆகவிந்
த முறைமையறிந்து) இதில் ஊனநடனமாகிய நகார மகாரத்தி
லேசென்று ஜநநமரணத்திலே போகாமல் ஞானநடனமாகிய சி
கார வகாரத்தைப் பொருந்திச் சிகாரமுதலாக வுச்சரித்து அப்
படி யுச்சரிக்கிற முறைமையும் விட்டு வகாரமாகி ஞானந்தானா
க நிற்கவேசிகாரமாகிய ஞேயத்திலே யழுத்துவிக்கும். அதுவெ
ப்படியென்னில் சத்தியாகிய வகாரமிடமாகச் சிவமாகிய சிகாரத்

தினிடையிலே அழுந்தவே அத்தன்மை யுண்டாக்கும் அதற்கு. உ-ம். நெஞ்சுவிடுதூதில். "அஞ்செழுத்தை யுச்சரிக்குங்கேண்மை யுணர்த்தி யுணர்த்தியபின் - வைச்சிருக்குமந்த வழியாக்கி" எ-ம். சிவப்பிரகாசத்தில். "திருவெழுத் தைந்தில்" என்றபாடத்திலும். திருவருட்பயனில் "ஊனநடன மொருபா லொருபாலா ஞானநடனந்தானடுவேநாடு" எ-ம். "ஆசினவர்காப்பணையா தருளினால், வாசியிடை நிற்கைவழக்கு" எ-ம். வருமேதுக்களைக் கண்டுகொள்க. ஆனால் பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்தாற் போதாதோ உச்சரிக்கவு மதின்மேலே சத்தி சிவான் மீகமாகிய எழுத்தினிடத்திலே நிற்கவும் அதின்மேலே மோக்ஷ முண்டாமென்ற தேதென்னில் பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்ததினாலே அஞ்ஞானநீங்கி ஞானம் பிரகாசிக்கும். அதற்கு. உ-ம். சிவஞானபோதச் சூரணையில். ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி யுச்சரிக்கவென்றது இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்து மஞ்ஞானத்தை வெய்புகின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாதவினது நீக்குதற் கெனக்கொள்க. இந்தப் பஞ்சாக்ஷர உச்சரிப்பிலே விளங்கின ஞானத்தினாலே நகார மகாரந் திரோதமலமென்றும் யகாரம் ஆன்மபோதமென்றும் மூன்றெழுத்து நீங்கி ஞானமேயா யந்த ஞானத்தினாலே சிகார வகாரத்தினிடையிலே நின்றழுந்துகிறதுவே சிறப்பென்றதற்கும். உ-ம். திருவருட்பயனில். "அருளினால் வாசியிடை நிற்கைவழக்கு" எ-து. கண்டுகொள்க. இப்படி ஞானத்திலே யழுந்துகிறோ மென்கிறதையும் விடவே சிவன்தானே யிவனை கிரகித்துக்கொண்டு மிவன் செயலெல்லாந் தன்செயலாகவு மிவனுந் தானாகவே நிற்பன். இதற்கு. உ-ம். திருவுந்தியாரில். "நஞ்செயலற்றிந்த நாமற்றபின்னாதன், றன்செயறானே யென்றுந் தீபற, தன்னையே தந்தானென்றுந் தீபற" இதிலிந்த மூன்றுவகையுங் கண்டுகொள்க. (௪)

கொடிக்கவி மூலமும் உரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பிரதிகள்தோறும்இந்நூலுரையாசிரியர் பெயர் காணப்படவில்லை.

உ

திருச்சிற்றம்பலம்

# உண்மைநெறிவிளக்கம்.

## மூலமும் உரையும்.

---

மண்முதற் சிவமதீறாய் வடிவுகாண் பதுவேரூப
மண்முதற் சிவமதீறாய் மலஞ்சட மென்றல்காட்சி
மண்முதற் சிவமதீறாய் வகையதிற் றானிலாது
கண்ணுத லருளால்நீங்கல் சுத்தியாய்க் கருதலாமே.

இ-ள், மண்முதற்சிவமதீறாய் - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களையும்,—வடிவுகாண்பதுவே ரூபம் - தனுவுங் கரணமும் புவனமும் போகமும் செயலும் பிரேரகமுமாய் நின்றபெருவடிவுங் குணமுந் தொழிலுந் தனக்கு வேறாய்க்காண்பதுவே தத்துவரூபமாம்,—மண்முதற் சிவமதீறாய் மலஞ்சட மென்றல்காட்சி - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களையுஞ் சுத்தமாயா அசுத்தமாயா மலத்தினது காரியமென்றுஞ் சடபதார்த்த மென்றுந் தன்னாலே யறியப்பட்டதென்றுந் தன்னறிவிலே விளங்கக் காண்பதுவே தத்துவ தரிசனம்—மண்முதற் சிவமதீறாய் வகையதிற் றானிலாது - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களினது விகற்பமாகிய சுட்டறிவுகளிற் றானில்லாமல்,—கண்ணுதலருளால் காண்டல் சுத்தியாய்க் கருதுமன்றே - தத்துவங்கள் தன்னைத்தாக்காமல் கானலைத் தண்ணீரென்று கண்டவன் கானலென்றறிந்த விடத்துத் திரும்ப விரும்பாதது போலவுஞ் சொப்பனத்தில் யானையேறிமாலை சூடக்கண்டவன் விழித்தவிடத் ததுமெய்யாய்க் காணாமல் பொ

ய்யாய்க் கண்டது போல்வுந் தன்னறிவிலே கண்டு நீங்கித் தானசைவின்றி யந்நியமு மெங்கு நிறைவாய் நித்தியமா யறிவாயுள்ள முறைமையை யறிந்து நிற்பது தத்துவ சுத்தியாமென்று வேதாகமங்கள் சொல்லும். (௪)

பாயிருணீங்கிஞானந் தனைக்காண்டலான்மரூப, நீயு,
நின்செயலொன்றின்றி நிற்றலேதரிசனந்தான், போயி
வன்றன்மைகெட்டுப் பொருளிற்போயங்குத்தோன்றா
தாயிடிலான்மசுத்தி யருணூலின் விதித்தவாறே.

இ-ள். பாயிருணீங்கிஞானந் தனைக்காண்டலான்மரூபம் தேசிகமூர்த்தத்தினது அநுக்கிரகத்தினாலே தன்னையுந் தன்னிடத்திலே பெந்தமாயிருக்கிற தத்துவ விவகாரங்களையு மெவ்விடத்திலுந் தோன்றாமல் சகசமாய் மறைத்துநின்ற வாணவ மலத்தையு நீங்கித் தானறியு முறைமையும் அவனது ஞான மறிவுக்கறிவாய் நின்றுபகரிக்கிற முறைமையுந் தன்னறிவிலே விளங்கக் காண்பதுவே ஆன்மரூபமாம்.—நீயுநின்செய லொன்றின்றிநிற்றலே தரிசனந்தான் - ஆன்மசெய்தி யெவ்விடத்திலுந் தோன்றாமல் தத்துவதாத்திகங்களை யென்னதென்றும் பசுஞானத்தை யானென்றும்நின்ற வசத்திடபோதநீங்கிப் பழைய சிற்றறிவாகிய சுட்டுப்போதங் கழன்றுநிற்பது ஆன்மதரிசனமாம்,—போயிவன்றன்மைகெட்டு - தனக்கெனச் செய்தியில்லாத வான்மா தனது சுட்டறி வெவ்விடத்திலுந் தோன்றாமற் கெட்டு,—பொருளிற்போய் - தன்னிடத்திலே விளங்கப்பட்ட வநுக்கிரக ஞானத்திலே தற்பூரணமெல்லா மடங்கித் தனது செய்தியெல்லா மநுக்கிரகத்தினது செய்தியாய்,—அங்குத் தோன்றாதாயிடில் - தன்னை யந்த ஞானமடக்கின முறைமையுந் தானந்த ஞானத்திலேயடங்கின முறைமையு மெவ்விடத்திலுந் தோன்றாமல், பெத்தத்தினாலே தேகமேதானாயுந் தானே தேகமாகியு நின்ற முறைமைபோலச் சிவமேதானாய் நிற்கவந்ததானால்,—ஆன்மசுத்தியருணூ

வின் விதித்தவாறே - ஆன்ம சத்தியாமென்று வேதாகமங்களின் வழியிலே யடைந்த ஞாதாக்கள் சொல்லு முறைமையாம்.

எவ்வடிவு களுந்தானு யெழிற்பரை வடிவதாகிக்
கவ்வியமலத் தான்மாவைக் கருதியே யொடுக்கியாக்கிப்
பவ்வம்விண் டகலப்பண்ணிப் பாரிப்பானொருவனென்று
செவ்வையே யுயிரிற்காண்டல் சிவரூபமாகுமன்றே.

இ-ள். எவ்வடிவுகளுந்தானுய் - ஜடசித்துக்களாகிய தாபர சங்கமங்களு ளெல்லாந் தான்வேறறநின்று,—எழிற்பரைவடிவதாகி - பெருமைபொருந்தி யிருக்கப்பட்ட காருண்ணியசத்தியே தனக்குத்திருமேனியாகி,—மலத்தான் மாவைக்கருதியே - ஆணவமலஞ் சகசமா யிருக்கப்பட்ட வான்மாக்கள் பாகபேதங்களைத் திருவுள்ளத்தடைத்து,—கவ்வியே - தனதிச்சாஞானக் கிரியையின் செய்தியாகிய மாயா தத்துவங்களினால்,—ஆக்கி யொடுக்கி - சிருஷடித்துந் திதித்துஞ் சங்கரித்தும்,—பவ்வம்விண் டகலப்பண்ணி - மலபாகவொழிவிலே யிந்தத் தத்துவங்கள் வேரும் படிக்குச் சத்திநிபாதத்தை விளைவித்து,—பாரிப்பானொருவன் - சத்திநிபாதத்தின் வழியிலே புறம்பே கட்புலனுக்குத் தோன்ற மாணிடச் சட்டைசாத்தி யெழுந்தருளிவந்து தான்வேறற நிற்கிறமுறைமையைத் தருகின்றவன் ஆன்மாக்களுக் கெல்லா மறிவுக்கறிவா யிருக்கிற சிவனேயென்று,—செவ்வையே யுயிரிற் காண்டல் - பிரதிக்கினை யேது திட்டாந்தங்களினாலே மயக்க விகற்பமறத் தன்னறிவிலே விளங்கக்கண்டு நிற்பது,—சிவரூப மாகுமன்றே-சிவனது ரூபமாமென்று வேதாகமங்கள் சொல்லும்.

பரையுயிரில் யானெனதென் றறநின்றதடியாம்
பார்ப்பிடமெங்குஞ் சிவமாய்த் தோன்றலது முகமாம்,
உரையிறந்த சுகமதுவே முடியாகுமென்றிவ் வுண்மை
யினை மிகத்தெளிந்து பொருள்வேறொன்றின்றித், தரை

உ

திருச்சிற்றம்பலம்

# உண்மைநெறிவிளக்கம்.

## மூலமும் உரையும்.

---

மண்முதற் சிவமதீறாய் வடிவுகாண் பதுவேரூப
மண்முதற் சிவமதீறாய் மலஞ்சட மென்றல்காட்சி
மண்முதற் சிவமதீறாய் வகையதிற் றானிலாது
கண்ணுத லருளால்நீங்கல் சுத்தியாய்க் கருதலாமே.

இ-ள், மண்முதற்சிவமதீறாய் - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களையும்,—வடிவுகாண்பதுவே ரூபம் - தனுவுங் கரணமும் புவனமும் போகமும் செயலும் பிரேரகமுமாய் நின்றபெருவடிவுங் குணமுந் தொழிலுந் தனக்கு வேறாய்க்காண்பதுவே தத்துவரூபமாம்,—மண்முதற் சிவமதீறாய் மலஞ்சடமென்றல்காட்சி - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களையுஞ் சுத்தமாயா அசுத்தமாயா மலத்தினது காரியமென்றுஞ் சடபதார்த்தமென்றுந் தன்னாலே யறியப்பட்டதென்றுந் தன்னறிவிலே விளங்கக் காண்பதுவே தத்துவ தரிசனம்—மண்முதற் சிவமதீறாய் வகையதிற்றானிலாது - பிருதிவிமுதல் நாதமீறான முப்பத்தாறு தத்துவங்களினது விகற்பமாகிய சுட்டறிவுகளிற் றானில்லாமல்,—கண்ணுதலருளால் காண்டல் சுத்தியாய்க் கருதுமன்றே - தத்துவங்கள் தன்னைத்தாக்காமல் கானலைத் தண்ணீரென்று கண்டவன் கானலென்றறிந்த விடத்துத் திரும்ப விரும்பாதது போலவுஞ் சொப்பனத்தில் யானையேறிமாலை சூடக்கண்டவன் விழித்தவிடத் ததுமெய்யாய்க் காணாமல் பொ

முதலிற் போகாது நிலையினினில்லாது தற்பரையினின்
றழுந்தா தற்புதமேயாகித், தெரிவரிய பரமாநந்தத்திற்
சேர்தல் சிவனுண்மைத் தரிசனமாய்ச் செப்புநூலே.

இ-ள். பரையுயிரில் யானென தென்றறநின்ற தடியாம் - ஆன்மாவென்ப தெவ்விடத்திலுந் தோன்றும லென்ன தென்றும் யானென்றும் நின்றவசத்திய போதநீங்கத் தேசிக மூர்த்தத்தி னநுக்கிரகஞானம் பிரகாசித்துநின்ற வவஸ்தரஞ் சிவனது பாதமாம்,—பார்ப்பிடமெங்குஞ் சிவமாய்த் தோன்றலது முகமாம் - தன்னை யுணர்த்தும் பகுதியாகத் தாக்குவதான விஷய போகங்களை யவனவளதுவாய் நோக்கு மிடமெல்லாமவ னநுக்கிரகத்தையே கண்டநுபவிப்ப தவனது திருமுகமாம்,—உரையிறந்த சுகமநுவே முடியாகும் - அந்த வநுக்கிரகத்திலே தற்செயல் தோன்றாமல் பரவசப்படுவதே சிவனது திருமுடியா மென்றறிந்து,—இவ்வுண்மையினை மிகத்தெளிந்து - இந்த வுண்மையைச் சந்தேகவிகற்பமற வுள்ளப்படி விசாரித்தறிந்து,—பொருள் வேறொன்றின்றி - இதுவல்லாமல் சத்தியமாயுள்ள பொருள் வேறேயுமொன்றில்லை யென்று தெளிந்து,—தரைமுதலிற் போகாது-என்னதியானென்னும் விகற்பமாகிய பிருதிவிமுதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட சகலாவத்தையிலும் பொருந்தாமல்,—நிலையினினில்லாது - இந்தக்கருவிகள் நீங்கினாற் றனக்குள்ள சகச நிலையாகிய கேவலாவத்தையிலும் பொருந்தாமல்,—தற்பரையினின் றழுந்தாது - இந்தக் கேவலசகலமிரண்டு நீங்கின விடத்து விளங்குவதான போதபூரணமாகிய அகம்பிரம ஞானத்திலும் பொருந்தாமல்,—அற்புதமேயாகி - தேசிகமூர்த்தத்தி னநுக்கிரக ஞானத்திலே தற்பூரணமெல்லா மடங்கித் தனது செய்தியெல்லா மவனதநுக்கிரக ஞானசத்தியினது செய்தியாய்,—தெரிவரிய பரமாநந்தத்திற் சேர்தல் - அரிதற்கரிதாகிய மேலான பூரணவின்பந்தோன்றும லேகதேச வியாபாரமாகிய தனுகரணாதி யின்பமே தோ

ன்ற அந்த வின்பங்களையே மெய்யென் றநுபவித்து நின்றமு றைமைபோலத் தனுகரணாதி யின்ப மெவ்விடத்திலுந் தோன் றாமல் பூரணவின்பத் தொடர்ச்சியாகிய தேசிகமூர்த்தத்தி னநு க்கிரக ஞானத்தை யெவ்விடத்திலுங் கண்டநுப்விப்பது,—சிவ னுண்மைத் தரிசனமாய்ச் செப்புநூலே - சிவனையுள்ளபடி சத்தி யமாகப் பெற்ற தரிசனமென்று சொல்லுஞ் சிவாகமங்கள். (அ)

இனி யான்மசுத்தியாகிய போதவொழிவும் அருள் கழற்றியு ம் வருமாறு.

எப்பொருள் வந்துற்றிடினு மப்பொருளைப் பார்த் தங்கெய்து முயிர்தனைக் கண்டிங் கவ்வுயிர்க்கு மேலா, மொப்பிலருள் கண்டுசிவத் தண்மைகண்டிங் குற்றதெ ல்லா மதனாலே பற்றிநோக்கித், தப்பினைசெய்வது மது வே நினைப்புமதுதானே தாநுமுணர்வு புசிப்புமதுதானே யாகுமெப்பொருளுமசைவில்லை யெனவந்தபொருளோ டிசைவதுவேசிவபோக மெனுமிறைவன்மொழியே.

இ-ள், எப்பொருள்வந் துற்றிடினும் - ஜடசித்துக்க ளிர ண்டினு நின்று விளங்குவதாகிய ஹிதா இதங்களுக் கேற்ற சத் தாதி விஷயங்களிலே யெந்த விஷயங்கள்வந்து தாக்கினாலும்,— அப்பொருளைப் பார்த்து - அந்த விஷயங்களை யெதிரிட்டுப் பார் த்து இது மாயாகாரியமான தனுகரண புவனபோகங்களினது விகற்பமென்று மிந்த விஷயங்களி னின்றும் விளங்குவதாகிய இதா இதங்கள் கன்மத்தினது விகற்பமென்றுங் கண்டு தனக்கெ னச் சற்றுஞ் செய்தியில்லாத ஜடரூபமாகையினாலே தானாய்ச்செ யற்படவறியாது.—அங்கெய்து முயிர்தனைக்கண்டு - அந்த விஷ யங்களை யதுவதுவாகப் புசிக்கு மான்மாவை நித்தியனாய்ப் பூர ணனா யறிவாயிருந்தாலும் தானாக வொன்றையு மறிதற் கறிவில் லையென்னு முறைமையை யுள்ளபடி தரிசித்து.—அவ்வுயிர்க்கு மேலா மொப்பிலருள் கண்டு - அந்த ஆன்மாவினது அறிவுக்க றிவாய்நின்று இந்த விஷயபோகங்களை யிடைவிடாமற் பாகமறி

ந்துணர்த்தி நிற்கிற திருவருளையு முள்ளபடி தரிசித்து,—சிவனு ண்மை கண்டு - அந்த வருளினது நிறைவெல்லாந் தனது வடி வாகவுடைய பூரணவின்பமெனக் கண்டித்துக் குருமூர்த்தமா யெழுந்தருளி மானிடச்சட்டை தரித்தவன் றுபதேசித்த வநுக்கி ரகத்தை யுள்ளபடி தரிசித்து,—இங்குற்றதெல்லா மதனுலேபற் றிநோக்கி - இவ்விடத்திலே வந்து பொருந்தப்பட்ட சத்தாதிவி ஷயங்களையெல்லா மந்த வநுக்கிரகத்தினுலே பொருந்திப் பார் த்து,—தப்பினைசெய்வது மதுவே நினைப்பு மதுதானே - இந்தவி ஷய போகங்களின் வழித்தாய்த் தீவினையைச் செய்விக்கிறதும நுக்கிரகமாகிய திருவருள்தானே நல்வினையைச் செய்விக்கிறதும ந்தத் திருவருள்தானே,— தருமுணர்வு புசிப்புமதுதானேயாகி - இந்த நன்மைதீமைகளை யறியும்படிக்குப் புசிப்பாகிவந்த விஷய பேதங்களு மவ்வநுக்கிரகமாகிய வருள்தானேயென் றுள்ளபடித ரிசித்து,—எப்பொருளு மசைவில்லையென - இந்த முறைமைய ன்றியிலே சித்தாகிய வான்மவர்க்கத்துக்கும் ஜடமாகிய பாசஜா லங்களுக்கு மொன்றையொன்றறியவு மொன்றையொன்று பொ ருந்தவு மொருசற்றுஞ் செயலில்லையென்று முறைமையை யுள்ள படி தரிசித்து அந்தப் பொருளோ டிசைவதுவே, —சிவபோக மெனு மிறைவன் மொழியே - அவனநுக்கிரக பூரணமெல்லாந் தற்பூரணமாகவு மிப்படி யிரண்டற நிற்கிறதே சிவனுடனே யிர ண்டறக் கூடின முறைமை யென்றுஞ் சிவாகமங்கள் சொல் லும். (௫)

பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப் பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றி வரினுஞ், சாதி நெறிதப்பிடினுந் தவறுகள்வந்திடினுந் தனக்கெனவோ ர்செயலற்றுத் தானதுவாய்நிற்கி, னுதனவ னுடலுயிரா யுண்டுறங்கிநடந்து நானுபோகங்களையுந் தானுகச் செய் து,பேதமற நின்றிவனைத் தானுக்கிவிடுவன் பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே.

இ-ள். பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப்பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றிவரினுஞ் சாதிநெறி தப்பிடினுந் தவறுகள் வந்திடினும் - இப்படிப்பட்ட செய்தியல்லாத் தொழில்களைச் செய்தாலும்,—தனக்கென வோர்செயலற்றுத் தானதுவாய்நிற்கில் - தற்செய லெவ்விடத்திலுந் தோன்றும லநுக்கிரகமாகிய வருணிறைவிலே வேறற நிற்கில்,—நாதனவ னுடலுயிராய் - அந்த வருளுக்கு முதன்மையாகிய நேய மவனதறிவுபூரணமெல்லாந் தனது வடிவாகக்கொண்டு தானந்தவறிவு பூரணத்துக்கெல்லா முயிராய்—உண்டுறங்கி நடந்து-இவனதறிவுதொழிலாகிய விந்திரிய போகங்களாய் வரும்புசிப்புந் தொழிலுந்தனது புசிப்புந் தொழிலுமாகவே புசித்துத் தொழிற்படும், —நானா போகங்களையுந் தானாகச்செய்து - நானாவிதமாகிய போகங்களையெல்லா மிவனுக்குத் தனது பூரணவின்பமாகிய நேயவடிவாகவே காட்டி,—பேதமறநின்றிவனைத் தானாக்கிவிடுவன் - இவனதறிவு பூரணமெல்லாந் தனதின்பப் பூரணமாகவும் தனதின்பப் பூரணமெல்லா மிவனதறிவு பூரணமாகவும் வேறறத் தோன்றிநின்று தனதின்ப நிறைவெல்லா மிவனதநுபோக பூரணத்தையமிழ்த்தி நிற்பது.—பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே ஜடசித்துருவ மாகிய பிரபஞ்ச மெவ்விடத்திலுந் தோன்றுமல் பெருகப்பட்ட சிவாநந்த மேலீடாகிய சிவபோகத்தினது முறைமை யித்தன்மைத் தென்று சொல்லும் வேதாகமங்கள்.

உண்மைநெறிவிளக்கம்-மூலமும்-உரையும்,

முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

இந்நூலுரையாசிரியர்பெயர் காணப்படவில்லை.

யிலே மலத்திலே பந்திக்கப்பட் டிருக்கையினாலே மல நீங்கும்படிக்குக் கத்தா கிருபையினாலே செய்வித்ததா யிருக்கும். ஆனால் மலமான்மாக்களைப் பந்தித்ததெப்படியென்னில் முன்னேயுண்டான நெல்லுக்குமிதவிடுமுளை முற்பிற்பாடில்லாம லநாதியிலே கூடத் தோன்றினதாயிருக்கும். இதிலாணவமல மான்மாவினறிவைமறைத்த தெப்படியென்னின் செம்பினுடைய நிறத்தைக் காளிதங்கூடவுதித்து மறைத்தது போன்றிருக்கும். கத்தாவினுடைய வியாபகத்திலே யான்மாக்க ணிறைந்திருக்கவுமாணவமல முயிரைமறைத்ததெப்படியென்னில் பழமையாகியகடல் வியாபகத்திலே நிறைந்திருக்கிற தண்ணீரை யுப்புக்கலந்து பிடித்திருப்பதுபோன்றிருக்கும். இப்படியெல்லாம் வெவ்வேறு யொருபுடையொப்பாகக்கத்தா வுள்ளவன்றேயுண்டா யருவமாய் மூவகை யான்மாக்களையு மாணவமலம்பிடித் துரிவையுடைய மகத்தான மாணிக்க மணியை நஞ்சுவாய்க்கு ளடக்கின மகத்தாகிய சர்ப்பம்போலவும் பச்சையாய் முளைத்து விறகாகுமட்டு மக்கினியைத்தெரியாமன் மறைத்து வைத்திருந்த காட்டம்போலவுமான்மாவினுடைய ஞானக்கண்ணை மறைத்த கடுந்தொழிலையுடையவாணவமலத்திலே யறிவுஞ்செயலு மிறந்த சகலவுயிர்களுக்குங் கத்தா கிருபையினாலே நன்று யவர்களிச்சையை நாடிப்பார்த்துக்கட்புலனினாற் காணுதபிறவியந்தகர்க்குரிமையுள்ளவர்களிச்சித்தபடிக்குக் கோலைக்கொடுத்திச்சித்த விடங்களிலேகொண்டுபோய்விடுகிறதுபோலப் பொலிவினையுடையமாயையின் காரியமான தனுகரண புவன போகங்களையு முன்னேயுண்டாக்கிக்கொடுத்து இச்சித்த புவனங்களிலே யிச்சித்தவினைப்போகங்களையுங் கூட்டி முடித்துப் புசிப்பிக்கையினு மந்தவாணவமல மயக்கத்தாற் கத்தாவுபகாரத்தை மறந்து நாமென்கிற வந்தக்கரண விகாரஹிதாஹிதமுண்டாகையாற் புண்ணியபாவ மிரண்டுமுண்டாம்படி காட்டியந்தப் புண்ணிய பாவத்தினாற் பிறக்கும் பிறவியுண்டாக்கிய

தினாற்செய்யு மிருவினைகளையு மேற்றுக்கொண்டு மீண்டு மந்தவி
னைப்போகங்களைப் புசிப்பதற்குக் கலாதிஞானங்களையுங் காட்டு
ங் கிருபைத்தொழிலெம்மையிரக்ஷிக்க.

நாட்டுகின்ற, வெப்பிறப்புமுற்செயிருவினையானிச்சயித்
பொற்புடையதந்தைதாய் போகத்துட்-கர்ப்பமாய்ப்[துப்
புல்லிற்பனிபோற் புகுந்திவலைக்குட்படுங்கா
லெல்லைப்படாவுதரத் தீண்டியதிப்-பல்வகையா
லங்கேகிடந்த வநாதியுயிர்சம்பசியர்
லெங்கேனுமாக வெடுக்குமென-வெங்கும்பிக்
காயக்கருக்குழியிற் காத்திருந்துங்காமியத்துக்
கேயக்கைகான்முதலா யெவ்வுறுப்பு-மாசறவே
செய்துதிருத்திப்பின் பியோகிருத்திமுன்புக்க
வையவழியேகொண் டணைகின்ற-பொய்யாத
வல்லபமே போற்றி.

எ-து. கத்தா வான்மாக்களுக்கு வினைப் போகங்களைப்புசி
ப்பிக்கிறதற்குத் தேகங்களைக் கூட்டுகிற முறைமை சொல்லுமிட
த்து முன் பாகமங்களிலே சொல்லப்பட்ட வெண்பத்து நான்கு
நூராயிர மியோனிபேதப் பிறப்பின்வகை யெல்லாமுன்செய்த
விருவினைக்கீடாக வுண்டாம்படி திருவுள்ளத்திலே நிச்சயித்துப்
பலபிரகாரம் வெவ்வேறு தேகபேதங்களையுண்டாக்குவதுமல்லா
மல் மானிடதேக முண்டாக்குவ தெப்படியென்னில் அழகுபொ
ருந்திய தந்தையுந் தாயுங் காமவிகாரந் திரும்படிக்குச் சையோக
போகஞ் செய்யுங்காலத்து அவர்களுக்குப் பிள்ளைபே றுண்டிவ்
லையென்பது மறிந்து தாயினுடைய கருப்பத்திற் றந்தையானவ
ன் புல்லினுனியிற்றங்கிய பனித்திவலைபோன் றவிந்துவை விடும்
போ ததற்குள் ளுயிரையடக்கி யுட்கருப்பாசயத்திற் சுரோணித

த்துடனே கல்ப்பித்திருத்தி யந்த விந்து தாய்வயிற்றி லுள்ளிரு
க்கிற வுதராக்கினியினா லெரிசுவராமலும் பலவகையாகிய வந்தவ
யிற்றுக்குட்கிடந்த வநாதி யுயிர்களாகிய புழுக்கள் தங்கள் பசியி
னாலேவந்தவிந்துவை விரைவிலே யெடுத்துப் புசியாமலும் வெய்
யகும்பிநரகம்போன்ற காயக்கருக்குழியிற் காத்திருந்து வினைக்
கீடான கைகால் முதலாகிய சகலவுறுப்புங் குற்றமறச்செய்து அ
ழகுபொருந்தத் திருத்திப் பின்பந்தத் தேகத்தையெடுத்துநேரே
யோகத்திலிருத்தித் திரிகால வர்த்தமானங்களையு மறியும்படிக்கு
ணர்வையுங் கொடுத்துப் பத்துமாதவளர்க்கும் புசிப்புங்கொடுத்
துப் பின்பு பூமியிலே பிறக்கும்போ திரண்டுகையுஞ்சிரசிலே கு
வித்த பாவனையாய்த் தலைகீழாய் வரும்படிசெய்துமுன்புகுந்த சி
றுவழியைப் பெருவழியாக்கி வுயிர் துன்புற்றிறவாம லுயிருக்குயி
ரா யணைந்திருந்து வெளியிலே யிழுத்துக்கொண்டு வருகிற மெ
ய்மையாகிய வல்லப மெய்ம்மையிரக்ஷிக்க.

அம்மாயக்கா ரூன்மறைப்ப
நல்லவறிவொழிந்து நன்குதீ - தெல்லையுரு
வக்காலந்தன்னிற் பசியையறிவித்தழுவித்
துக்காவிசோரத்தா யுண்ணடுக்க-மிக்கோங்குஞ்
சிந்தையுருகமுலையுநகுக் தீஞ்சுவைப்பால்
வந்துமடுப்பக்கண்டு வாழ்ந்திருப்பப் - பந்தித்த
பாசப்பெருங்கயிற்றாற் பல்லுயிரும்பாலிக்க
நேசத்தைவைத்த நெறிபோற்றி.

எ - து தாய்வயிற்றைவிட்டு பூமியிலே பிள்ளை பிறந்தவுட
னே சரீரத்துக்குக் காரணமான மாயைச் சண்டமாருதம்போல
லைத்துமயக்க முன்கருப்பத்தினிருக்கும்போ திந்தப் பிறவித்து
ன்பத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென் றவ்விடத்திலேநினைத்தி
ருந்த நல்லநினைவையுமறந் துயிர் தேகமயமாய் நல்வினை தீவினை

த்துன்பத் தொடர்ச்சியாற் பகுத்தறிவில்லாமல்அக்காலத்தி லுயி
ர்புசிப்பிச்சை யுற்றிருப்பதை யறிந்து பசிதெரியும்படி யறிவித்
துக்கதறியழும்படி செய்வித்துப் பிள்ளையழுவதுகண் டடனேபெ
றும்போதுற்ற வருத்தத்தையுந்தாயானவள் மறந்து உட்கி யாவி
சோரும்படியுள்ளே நடுங்கிமிகுந்தோங்கிய வன்பினாலே யவள் சி
ந்தை யிரங்கி யுருகப்பச்சுடம்பி லிருந்த இரத்தஞ் சிவப்புமாறி
வெண்ணிறவமுதமாய்க் கொங்கையில்வந்து சுரக்கிற வந்த தீஞ்
சுவைப் பாலைப்பிள்ளை வாய்வைத்துக்குடித்து முகஞ் செழித்தி
ருப்பதுகண்டுதாய்மகிழ்ந் திருக்கும்படி செய்வித்திப்படித் பிள்
ளையாசையென்கிற பெருங்கயிற்றினாற் கட்டிச் சகலவுயிர்களுக்கு
ங் குழந்தைகளை வளர்க்கும்படிக்கு ஆன்மாக்கடோறு நேசத்தை
வைத்தருளிய நெறி யெம்மையிரக்ஷிக்க.

ஆசற்ற, பாலைப்பசும்பதத்தும் பாலனுமப்பதத்து
நாளுக்குநாட்சகல ஞானத்து-மூள்வித்துக்
கொண்டாளவாளக் கருவிகொடுத்தொக்கநின்று
பண்டாரியான படிபோற்றி.

எ-து தாயன்பா யிருந்திரக்ஷித்த கத்தா விப்படிசனித்துவ
ருமுயிர்களுக்குக்கருப்பத்தி லிருக்கிற பசும்பருவத்தும்பாலனாயி
ருக்கிற அந்தப்பருவத்தும் நாளுக்குநாள்பரிணமித்துவளரும்பால
குமார விருத்தப்பருவத்துஞ் சகலாவத்தைப் படுத்திப் பருவத்
துக்கேதுவான கலாதிஞானத்தைச்கொடுத்துச்செயலற்றவுயிர்கள்
வாங்கிக்கொள்ள வாள்வதற்கேற்ற முப்பத்தாறுவகைக் கருவிக
ளையுங்கொடுத் துயிர்க்குயிரா யிமைப்பொழுது நீங்காமநின்று ப
ண்டாரியா யுயிர்க் கேவல்செய்யுங்கிருபை யெம்மை யிரக்ஷிக்க.

தண்டாத, புன்புலால்போர்த்த புழுக்குரம்பைமாமனையி
லன்புசேர்கின்றனகட் டைந்தாக்கி-முன்புள்ள
வுண்மைநிலைமை யொருகாலகலாது
திண்மைமலத்தாற் சிறையாக்கிக்-கண்மறைத்து

மூலவருங்கட்டி லுயிர் மூடமாயுட்கிடப்பக்
காலநியதி யதுகாட்டி-மேலோங்கு
முந்திவியன்கட்டி லுயிர் சேர்த்துக்கலைவித்தை
யந்தவராக மவைமுன்பு-தந்த
தொழிலறிவிச்சை துணையாகமானி
னெழி லுடையமுக்குணமு மெய்தி-மருளோடு
மன்னுமிதயத்திற் சித்தத்தாற்கண்டபொரு
ளின்னபொருளென் றியம்பவொண்ணா-வங்கிலைபோய்க்
கண்டவியன்கட்டிற் கருவிகளீனாங்தொழியக்
கொண்டுநியமித்தற்றை நாட்கொடுப்பப்-பண்டை
யிருவினையான்முன்புள்ள வின்பதுன்பங்கண்
மருவும்வகையங்கே மருவி-யுருவுடனின்
றோங்குறுதலாய வோலக்கமண்டபத்திற்
போங்கருவியெல்லாம் புகுந்தீண்டி-நீங்காத
முன்னைமலத்தினிருண் மூடாவகையகத்துட்
டுன்னுமிருணீக்குஞ் சுடரேபோ-லந்நிலையே
சூக்கஞ்சுடருருவிற் பெய்துதொழிற்குரிய
ராக்கிப்பணித்த வறம்போற்றி.

எ - து கத்தா பண்டாரிபோலநின்று தத்துவங்களைக்கூட்டியிரக்ஷிக்கும்படி யெப்படியென்னில் நீங்காமற் புன்புலால்நாறுந்தோல்போர்த்த புழுக்கூடான சரீரமாகிய பெரியமனைக்குள் கிருபையினாலே துரியாதீதந் துரியஞ் சுழுத்திசொப்பனம் சாக்கிரமென்னும் பெயருடைய வைந்து கட்டாக்கி யான்மாவுக்கநாதியிலே பொருந்தின வுண்மைநிலையான வாணவமல மறைப்புச்சற்றுநீங்காமற் றிண்மையா யுயிரைச்சிறைப்படுத்தி நிற்குமூலாதாரமாகியவீட்டி லதிதப்பட்டுயிர் மூடமாயுட்கிடப்ப வவ்விடத்

திலிளைப்பாறுமட்டுங் காலத்தை நியதியினு ணிறுத்தி யப்பான்மே
லே யோங்கியிருக்குந் துரியமான நாபித்தானவீட்டி லுயிரைப்பி
ராணவாயுவுடனேகூடச் சேர்த்து அவ்விடத்திலே கலைவித்தையி
ராகத்தினுன்முன்னேயான்மாவினுடையதொழிலறிவிச்சைமூன்
றையுமெழுப்பியதற்குத் துணையாகப் பிரகிருதிமாயையிலுண்
டானவழகுபொருந்திய சாத்துவீக ராசததாமத மென்னு முக்கு
ணங்களையுஞ்சேர்த் தப்பான் மேலே சுழுத்தி வீடாகிய ஹிருதய
த்தானத்திற் சித்தக்கருவியுடனே கூட்டி யவ்விடத்திற் சித்தத்
தாற் கண்டபொரு ளின்னபொருளென் றறியாமன் மயங்கிநின்
றவுயிரைச் சொப்பன வீடாகிய கண்டத்தானத்திற் சேர்த்து அ
வ்விடத்திலே சத்தாதியைந்தும் வசனாதியைந்தும் அந்தக்கரண
ங்கள் நான்கும் வாயுக்கள் பத்தும் புருடனுமானவிருபத்தைந்து
கருவியுங்கூட்டி முன்னே செய்த விருவினைக்கீடாக முன்சாக்கி
ரத்திலே யின்ப துன்பத்தைப் புசிப்பித்தமுறைமைபோலச்சொ
ப்பனத்திலு மிருவினைப்போக முண்டானது மறிந்து சுத்ததத்து
வங்களினாற் பிரேரித்துப் புசிப்பித்துப் பின்பதற்கு மேலாய தூ
லதேகத்தின்கண் வளர்ந்து நிற்கிறசாக்கிர வீடாகிய நுதற்றான
மாகிய வோலக்கமண்டபத்தின்முன் கேவலாவத்தைக்குக் கூடா
மனின்ற பூதங்களைந்தும் புருடதத்துவநீங்கலாகநின்ற வித்தியா
தத்துவமாறுஞ் சிவதத்துவமைந்து மாகப்பதினாறு முன்சாக்கிர
த்தி லிருந்த ஞானேந்திரியமைந்துங் கன்மேந்திரிய மைந்துஞ்
சொப்பனத்திலிருந்துவந்த விருப்பத்தைந்து கருவியு மற்றப்புற
க்கருவிசனுற்பத்தைந்து மாகத் தொண்ணூற்றாறு கருவிகளையும்
பொருத்திச் சீவிக்கும்படி செய்வித்து முன்னேவிட்டுநீங்காமலை
ந்தவத்தையினு மறைந்துநின்ற வாணவமல மிருள்கூடாதபடிம
னையிலேநெருங் கியிரா நின்ற விருளை நீக்கும் விளக்கைப்போல
ச்சூக்குமாதி வாக்குடனே கூடிப் பிரகாசித்து நிற்குஞ் சகலாவ
த்தையிலுயிரை நிறுத்திக் கன்மத்துக்கேதுவான சத்தாதி விடய
ங்களைக்காட்டி யான்மாக்கள் யானெனதென்று கர்ச்சித்துநின்

றவைகள் வெவ்வேறு தொழிற்குரியராம்படி செய்விக்குஞ் சிவத
ர்ம மெம்மையிரட்சிக்க.

வேட்கைமிகு, முண்டிப்பொருட்டாலொருகாலவியா து
மண்டியெரியும் பெருந்தீமாற்றுதற்குத்- திண்டிறல்சேர்
வல்லார்கள்வல்ல வகையாற்றொழில்புரித
லெல்லாமுடனே யொருங்கிசைந்து-செல்காலை
முட்டாமற்செய்வினைக்கு முற்செய்வினைக்குஞ்செலவு
பட்டோலைதீட்டும் படிபோற்றி.

எ-று. கத்தா சகலவத்தையிற் கருவிகூட்டி முடிக்குமுபகாரத்தைமறந்து ஆன்மாக்கள் பிரபஞ்ச வாசைமிகுந்துபுசிப்புநிமித்திய மொரு கணநேரமானாலுங் கெடாமல் வயிற்றிலே மண்டியெரிந்து கொண்டிருக்கிற வடவாமுகாக்கினிபோன்ற பசியைத்தணிக்கும்பொருட்டுத் திண்ணியவாங்காரப் பலன்களால் வருவரவல்லமைக்கேற்ற தொழில்கள் செய்யுமிடத் தவர்களுக்குத் தோன்றும வுடனிகழ்ச்சியான வொருமைப்பாடாய்க் கூடிநின்றவரவர் நினைவின்படி செய்வித்துக்கொடுத் தான்மாக்கள் யானெனதென் றிடையறுதசெய்யும்வினை மிகுதியான வாகாமியத்துக்கு முன்செய்தவாறத்துவாவிலுங் கட்டுப்பட்டிருக்கிற சஞ்சிதத்துக்கு மதிலேபாகப்பட்டுப் புசிப்புக்குவந்த பிராரத்துவஞ்செலவுக்கு மவரவர் கணக்கப்பிள்ளையாயிருந்து பட்டோலை யெழுதி யொப்பிக்குங்கருணையிரட்சிக்க.

நட்டோங்கு, மிங்கிலைமைமானுடருக் கேயன்றியெண்
மன்னுயிர்க்குமிந்தவழக்கேயாய்-முன்னுடைய [ணிலா
நானாள்வரையி லுடல்பிரித்துநல்வினைக்கண்
வானாளின்மாலா யயனாகி-நீனாகர்
வானாடர்கோமுதலாய் வந்தபெரும்பதத்து
நானுவிதத்தா னலம்பெறுநாட்-டான்மாள

வெற்றிக்கடுந்தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம்வெங்குருவின் பாற்காட்ட-விற்றைக்கு
மில்லையோபாவி பிறவாமையென்றெடுத்து
நல்லதொரீன்சொ னடுவாகச் - சொல்லியிவர்
செய்திக்குத்தக்க செயலுறுத்துவீரென்று
வெய்துற்றுரைக்க விடைகொண்டு-மையறருஞ்
செக்கினிடைத்திரிக்குந் தீவாயிலிட்டெரித்துந்
தக்கநெருப்புத்தூண்டழுவுவித்து-மிக்கோங்கு
நாராசங்காய்ச்சிச் செவிமடுத்துநாவரிந்து
மீராவுண்ணானைத்தின் னென்றடித்தும்-பேராம
லங்காழ்நரகத் தழுத்துவித்தும்பின்னுந்தம்
வெங்கோபமாறாத வேட்கையரா-யிங்கொருநா
ளெண்ணிமுதற்காணாத வின்னற்கடுநகரம்
பன்னெடுநாட்செல்லும் பணிகொண்டு-முன்னாடிக்
கண்டுகடன்கழித்தல் காரியமாமென்றெண்ணிக்
கொண்டுவருநோயின் குறிப்பறிவார் மண்டெரியிற்
காய்ச்சிச்சுடவறுக்கக் கண்ணுரிக்கநன்னிதிய
மீய்த்துத்தாய்தந்தைதம ரின்புறுதல்-வாய்த்தநெறி
யோடியதேரின்கீழுயிர்போனகன்றாலே
நீடுபெரும்பாவமின்றே நீங்குமென-நாடித்தன்
மைந்தனையுமூர்ந்தோன் வழக்கேவழக்காக
நஞ்சனையசிந்தை நமன்றூதர்-வெஞ்சினத்தா
லல்லலுறுத்து மருநரகங்கண்டுநிற்க
வல்லகருணைமறம் போற்றி.

எ-து. கத்தா வான்மாக்கள்செய்த விருவினைக்குங் கணக்கெழுதினபடிக்குப் புண்ணிய பாவத்துக்குள்ள பலன்களையுங் கூட்டுகிற தெப்படியென்னில் பொருந்தி மிகுந்த விருவினைமுறை

மை பூமியிலுள்ள மானுடருக்கே யல்லாமலு மெண்ணில்லாத த
னுக்களிலே பொருந்தியிருக்கிற பல் வுயிர்களுக்குமிந்த முறை
மையாக் வினைகளை நிச்சயித்தறிந்து முன்னமைத்த வாயுசுமுடி
வி லுடல்களைப் பிரித்து நல்வினை பாகப்பட்டவுயிர்களையெல்லா
ம்பூதசரீரமானதிவ்விய சரீரத்துடனேகாலநீட்டிப்பாய் வாழ்ந்தி
ருக்கும்படிக்குவிஷ்ணுவுலகத்தில்விஷ்ணுரூபமாயும் பிரமலோக
த்திற் பிரமரூபமாயுந் தேவலோகத்திற் தேவேந்திர ரூபமாயுந்
தேவர்களாயும்வந்த பெரிய பதப்பிராப்திகளிலேநானாவிதமான
போகங்கள் புசித்திருக்கும்படிசெய்வித்தும் பூமியிலே இராச ஐ
ஸ்வரியத்துடனே வாழும்படி செய்வித்துமிருக்கு நாராயணபுண்
ணிய காமபலன் புசித்து முடித்து பாவகன்மபலன் புசிக்குநா ள
டுத்தவுடனேயங்கங்குவாழ்ந்திருந்தவுயிர்கள் ளந்தந்ததேகத்தைவி
ட்டு மாளும்படிக்குக் கத்தாவினுடைய வாக்கினையினாலே வெற்
றிபொருந்திய யமதூதர்கள் வேகத்துடனேவந்து பாசத்தினாற் க
ட்டிப்பிடித்துக் கொண்டுபோய்த் தங்களெசமானாகிய தருமராஜா
வின் முன்புவிடத் தருமராஜாவந்து ஆன்மாக்களைப் பாாத்திரங்
கிப் பாவிகா ளுங்களுக் கிற்றைவரைக் குள்ளாகப்பிறவாநெறி
பெற வேண்டுமென்று கத்தாவைவிரும்பு மறிவு பிறக்கவில்லை
யோவென்று நல்ல வின்சொல்லாக நடுவுநிலைமையாகப் பேசிப்
பின்பவர்கள்செய்த பாவத்துக்கேற்ற செயல்களைச் செய்யுமென்று
கோபத்துடனே கிங்கரர்களைப் பார்த்துச் சொல்லவிடைபெற்று
ப்பூதசரீரமான யாதனாசரீரத்திலே யுயிரைநிறுத்தித் தன்பமுறு
ம்படிக்குச் செக்கிலேயிட் டாட்டியுந் தீவாயிலிட் டெரித்தும்பெ
ரியநெருப்புத்தூணைத் தழுவிக் கிடக்கும்படிசெய்து மிருந்து நீ
ண்டிருக்கிற நாராசங்களைக் காய்ச்சிச்செவியிலே செலுத்தியுநா
க்கைக் கருவிகொண் டறுத்தும்அவரவருணை யவரவர் தின்னும்
படிக் கரிந்துகொடுத் தடித்தும்போாதபடி யாழ்ந்த நகரங்களி

லே யழுத்துவித்தும் பின்னுந்தங்களுடைய கடுங்கோபமாறாத
விச்சையுடையரா யவற்றிலேயொருநாள்போல் ஐன்பத்தைக்
கொடாநின்ற கொடிய நரகங்களிலே பலநெடுநாட் செல்லுமட்
டுமியமகிங்கர்கள் பணிசெய்யக் காருண்ணிய வடிவாகிய கத்தா
சிற்றுயிர்களை யமகிங்கரர்களிடத்திலே காட்டிக்கொடுத்து அவர்
கள் துக்கப்படுகிறதைப் பார்த்திருப்பானோ வென்னில் உலகத்
திலே தந்தை தாயானபேர்கள் பிள்ளையினுடைய நோய் மிகுதி
யை யுள்ளோநாடியறிந்து நோய்தீரும்படிக் கதற்கேற்ற முறை
மைசெய்வது கடனென்று நினைந்து பிள்ளையை நோயறிந்து மரு
ந்துகொடுத்துத் தீர்க்கும் வைத்தியத்தொழில் செய்கிறவனிடத்
திலே யொப்புவித்து அவனிருப்பு நாராசங்காய்ச்சிச் சுடவுஞ்சத்
திரமிட் டறுக்கவுங் கண்படலத்தை யுரிக்கவு மிப்படிப்பலகிரி
யையுஞ்செய்யப் பிள்ளை வருத்தப்பட்டாலு நோய்தீர்ப்பதையறி
ந்தந்தவைத்தியனுக்கு நல்ல திரவியமுதலானவெகுமானம்பண்
ணிச் சந்தோஷத்துடனே யவர்கள் கண்டுநிற்பதுபோலவுமனுச்
சக்ரவர்த்தியான சோழராஜா தானரிய தவம்பண்ணிப்பெற்ற வ
ருமையான வொருமகன் திருவாரூர்த் தெருவழியேதேரேறிப்
போம்பொழுது மாயமாகத் தேர்க்காலில் வீழ்ந்திறந்த பசுவின்
கன்றினிமித்திய மந்தப் பாவந் தீரும்படிக் கெத்தனைபேர்கள்மா
றுபாடாய்த் தடுக்கவுங்கேளாமற்பிள்ளையைக்கன்று தங்கினபடிக்
குத் தேர்க்காலிலேபோட்டு நசுக்கிப்போட வெண்டுமென்று து
ணிந்து தேரிலே தாய்ப்பசுவைவைத் தூர்ந்துகொன்றது மகனை
யமன்பிடித்து வருந்தாதபடிக்குச்செய்தகிருபையே யாகையால
ந்தவழக்குப்போலவும் விடம்போன்றசிந்தையையுடைய நமன்
தூதர் மிகுந்த கோபத்துடனே பாவஞ்செய்த வுயிர்களைக் கொடி
ய நரகவாதனைப் படுத்துவதைச்சகல வுயிர்களுக்குந் தந்தையுந்
தாயுமாயிருக்கிற சிவமுஞ் சத்தியுமலநோய் தீர்ந்தாற் போதுமெ
ன்று சந்தோஷத்துடனேகண்டு நிற்கிற வல்லபமான கருணை மற்
றெம்மை யிரட்சிக்க.

பல்லுயிர்க்கு, மின்னவகையாலிருவினைக்க னின்றருத்தி
முன்னைமுதலென்ன முதலில்லோ-னல்வினைக்க
ணெல்லாவுலகு மெடுப்புண்டெடுப்புண்டு
செல்காலம்பின்னரகஞ் சேராமே-நல்லநெறி
யெய்துவதோர்காலந்தன் னன்பரைக்கண்டின்புறூஉ
அய்யுநெறிசிறிதே யுண்டாக்கிப்-பையவே
மட்டாய்மலராய் வருநாளின் முன்னைநாண்
மொட்டாயுருவா முறைபோலக்-கிட்டியதோர்
நல்லபிறப்பிற் பிறப்பித்துநாடும்வினை
யெல்லையிரண்டு மிடையொப்பிற்-பல்பிறவி
யத்தமதிலன்றோ வளவென்றுபார்த்திருந்து
சத்திபதிக்குந் தரம்போற்றி.

எ - து. கத்தா விங்ஙனஞ் சொன்ன வொன்பது வகையினாலு மிரட்சிக்கப்பட்ட வான்மாக்களுக்குப் பெத்தகால முடிவாகமட்டு மிருவினைப் பலன்களை யவனவனது முன்னிலையாக னின்றருத்தித் தனக்குமேலொரு கத்தாவில்லாத சகலபுவன கத்தாவாகிய சிவனந்த விருவினைகளுக் கிருப்பிடமானமாயா வுலகங்களை யெடுப்புண் டெடுப்புண்டு மாறிமாறி வரும்படிக்காதியநாதிதொடுத்துச் சிருஷ்டித்துத் திதித்துஞ் சங்கரித்துந் திரோபவித்து மநுக்கிரகித்துந் தமது சத்தியினாலே பஞ்சகிருத்தியங்களை செய்வித்து மலபரிபாகப்பட்டதையறிந்து பின்னரகத்திற் செல்லும் பெத்தத்தைநீக்கி யான்மாக்களுக்கு முத்திக்காலத்தைநேர்ப்படுத்தவேண்டித் தனக்கன்பரான மெய்யடியார்களைக் கண்டவுடனே தன்னைக் கண்டதுபோல வந்தவான்மாக்க ளின்புற்றவரேவின பணிவிடைகேட் டெய்யும்படிக்குச் சிறிது நல்லவழியையுண்டாக்கிக் காட்டி யதினல்வழியே சிவபுண்ணியமான புத்திபூர்வத்தினும்புத்திபூர்வத்தினு முபாயச்சரிதையாதியிலு முண்மைச்சரிதையாதியிலுமாகக் கிரமத்திலே செய்யப்படுத்தியந்தமட்டாய் மலராவிருக்கிற வரும்பு பருவநீங்கிய வரும்பருவத்தைக்கடுத்த முத

ளுள் மொட்டாயிருக்கிற மலர்போல் மலம் பரிபாகம் பிறந்தத ன்மை சமீபத்திற் கண்டு ஒப்பற்ற நல்லசிவ சமயத்திற் பத்திமி குந்த விடத்திலே பிறப்பித்து நாட்பட்ட விருவினையு மேககா லத்திலே யிரண்டுந் தராசு நுனிபோலச்சமனானபருவத்திலே ப லபிறவியு மந்தமாம்படிக்குத் தமது தீவிரதரம் பொருந்தின வ ருட்சத்தியை யவ்வுயிர்களின் மலநீங்கும்படிக்குப்பதிக்குந்தாமெ ம்மை யிரட்சிக்க.

முத்திதரு, நன்னெறியிஞ் ஞானகலர் நாடுமல மொன்றி
மந்நிலையேயுண்ணின் றறுத்தருளிப்-பின்னன்பு [ளையு
மேவாவிளங்கும் பிரளயாகலருக்குத்
தேவாய்மலகன்மந்தீர்த்தருளிப்-பூவலயந்
தன்னின் றுநீங்காச் சகலர்க்கவர்போல
முன்னின் றுமும்மலந்தீர்த்தாட்கொள்கை- யன்னவனுக்
காதிகுணமாதலினா லாடுந்திருத்தொழிலுஞ்
சோதிமணிமிடற்றுச் சுந்தரமும்-பாதியாம்
பச்சையிடமும் பவளத்திருச்சடைமேல்
வைச்சநதியு மதிக்கொழுந்து-மச்சமற
வாடுமரவு மழகார்த்திருநுதன்மே
னீடுருவவன்னி நெடுங்கண்ணுங்-கேடிலயங்
கூட்டுந்தமருகமுங் கோலவெரியகலும்
பூட்டரவக்கச்சும் புலியதளும்-வீட்டின்ப
வெள்ளத்தழுத்தி விடுந்தாளினுமடியா
ருள்ளத்தினும்பிரியா வொண்சிலம்புங்-கள்ளவினை
வென்றுபிறப்பறுக்க சாத்தியவீரக்கழலு
மொன்றுமுருத்தோன்றாம லுள்ளடக்கி-யென்று
மிறவாதவின்பத் தெமையிருத்தவேண்டிப்
பிறவாமுதல்வன் பிறந்து-நறவாருந்
தாருலாவும்புயத்துச் சம்பந்தநாதனென்று
பேரிலாநாதனொரு பேர்புனைந்து-பாரோர்த

முண்டியுறக்கம் பயமின்பமொத்தொழுகிக்
கொண்டுமகிழ்ந்த குணம்போற்றி.

எ - து. இருவினையொப்பு மலபரிபாகஞ் சத்திநிபாதம்பெற்ற பக்குவான்மாக்களுக்குக் கத்தா வாசாரியமூர்த்தமா யநுக்கிரகம் பண்ணுகிற முறைமை யெப்படியென்னில் முத்தியைக் கொடுக்கு நல்வழியையுடைய விஞ்ஞானகலர்க் கவர்கள்பற்றியிருக்கிற வாணவமல மொன்றினையு மவர்களறிவுக்குட்பேரறிவாய்ப் பிரகாசித்துத் தோன்றி நீக்கி யருள்வடிவாக்கிஞேயத்தி லழுந்தும்படி கடாட்சிப்பர். பின்பு பொருந்திவிளங்காநின்ற பிரளையாகலருக்குத் திருவுரு காணும்படிக்கு மானுமழுவுஞ் சதுர்ப்புஜமுங் காளகண்டமுந் திரிநேத்திரமுமுடைய திருமேனிகொண்டிருந்து அவர்களைப் பற்றியிருக்கிறவாணவமலஞ் கன்மமல மிரண்டையு நீக்கி யருள்வடிவாக்கிஞேயத்தி லழுந்தும்படி கடாட்சிப்பர். அசுத்த மாயையிற்றோன்றிய பூலோகத்தைவிட்டுநீங்காமலிருக்கிறசகலருக்கவர்களைப்போல்மானிடச்சட்டைசாத்தி மானைக்காட்டிமானைப்பிடிப்பார்போல முன்னின்றுதரிசனைகொடுத் தவர்கள்பற்றியிருக்கிறவாணவங் கன்மமாயையென்னுமூன்றுமலங்களையுந் தீக்ஷாக்கிரமங்களினாலேதீர்த்தருள்வடிவாக்கி யடிமையாக்கிக் கொள்ளுதலந்தக் கத்தாவுக்காதிகாலத்திலே யுண்டானகுணமாதலாற்றிருச்சிற்றம்பலத்தின் கண்ணேநின்றாடுகிற திருநடனத்தொழிலும் பிரகாசம் பொருந்திய நீலமணிபோன்றிலங்குகிற காளகண்டமுந் திருமேனியிற் பாதியாய்ப் பச்சைவடிவுகொண்டிலங்குஞ் சிவகாமிதங்கிய விடப்பாகமும் பவளக்கொடி படர்ந்து கிடப்பதுபோன்ற திருச் சடாபாரத்தின்மேற் றரித்திருக்கிற கங்கையும் பால்சந்திரப் பிரபையும் வெருவும்படிக்குப் படம்விரித்தாடுகிற சர்ப்பமும் அழகு மிகுந்ததிருநுதனடுவின்மேனோக்கிநீண்டுகிடந் திலங்கு மக்கினிநேத்திரமும் வலக்கையிற் பிடித்திருக்கிற கேடில்லாத லயத்துடனே முழங்குந் தமருகமு மழகு

பொருந்திய விடதலையிற் பிடித்திருக்கிற வக்கினி குண்டமு மரையிலே கட்டியிருக்கிற வைந்தலை யரவக்கச்சும் புள்ளிபொருந்திய புலித்தோலுடையும்பக்குவான் மாக்களை மோக்ஷமாகிய பேரின்ப வெள்ளத்தழுத்துதற்கூன்றின பாதத்தினு மடியா ருள்ளத்திற்கலந் தின்பபூரணமாயிருக்கிற ஞான குஞ்சிதபாதத்தினும்பிரியாமற் றரித்திருக்கிற திருவருட்பிரகாசம்பெயருந்திய சிலம்பு முயிர்களைச் சோரத்தனமாய்க் களவுகொண்டு தன்வசப்படுத்துகிற முன்னை வினையைவென்று பிறவித்துன்பங்களையறுப்பதற்கு மல்லைவரிகாமென்று முழக்குந்தாளிற் றரித்துக்கொண்டிருக்கிற வீரகண்டாமணியையு மிவைகளொன்று முருத்தோன்றுதபடி யுள்ளேயடக்கி யொளித்துக்கொண் டென்றுமுடிவில்லாத பேரின்ப மோக்ஷத்தி லெம்போல்வாரையு முறுத்தவேண்டிப் பிறவாமுதல்வன்பிறந்து வந்தானென் றதிசயமாய்ச்சொல்லும்படிக்குத் திருமேனிகொண்டு தேன்பொருந்தியசெங்கழுநீர்மாலை புலாவும் புயத்தையுடைய மறைஞான சம்பந்தநாதனென்றொரு பெயருஞ்சுபாவத்திலில்லாதநாத னொருதிருப்பெயருஞ் சாத்திக் கொண்டு பூமியிலுள்ளவர்களைப்போலவுண்பதும் உறங்குவதும் அஞ்சுவதும் விடயபோக மின்புறுவது மொத்தொழுகிக்கொண்டெழுந்தருளி மகிழ்ந்திருந்த குண மெம்மையிரட்சிக்க.

மிண்டாய, வாதுசமயப்பொருளுரு மறிவித்தவற் றிற்
பேறின்மை யெங்களுக்கே பேருக்கித் - தேறுத
சித்தத்தெளியத் திருமேனிகொண்டுவரு
மத்தகைமைதானே யமையாமல் - வித்தகமாஞ்
சைவநெறியிற் சமயமுதலாக
வெய்துமபிடேக மெய்துவித்துச் - செய்யதிருக்
கண்ணருளானோக்கிக் கடியபிறப்பாற்பட்ட
புண்ணுமிருவினையும் போயகல - வண்ணமலர்க்

கைத்தலத்தைவைத்தருளிக் கல்லாயநெஞ்சுருக்கி [குன்
மெய்த்தகைமையெல்லாம் விரித்தோதி - யொத்தொழு
சேணாரிருள்வடிவுஞ் செங்கதிரோன்பானிற்பக்
காணாதொழியுங் கணக்கேபோ - லாணவத்தி
னாதிகுறையாம லென்பாலணுகாமு
னீதிநிறுத்து நிலைபோற்றி.

எ - து. இப்படி மானுடரைப்போலத் திருமேனிகொண்டாசாரியமூர்த்தமாய்ப் பெண்ணாகடத்தின்க ணெழுந்தருளியிருந் தெங்களுக் ககங்காரம்பொருந்திய புறச்சமயப் பொருள்களெல்லா மறிவித்ததிலே யொருபிரயோசனமு மில்லையென் றறிகிறதிடமே பேறுகும்படி செய்வித்துத் தேறுமலிருந்த சித்தந்தெளியும்படிக்குத் திருமேனி தரிசனைகொடுத்தருளிய வந்தத் தகைமையும் போகாமன் மேம்பாடாகிய மெய்கண்ட சந்தானச் சுத்தசைவநெறியில் விட்டகுறையறிந்துசமயவிசேடநிருவாணம்பொருந்தப்பட்ட வபிடேகமென்னு நான்குவகைத்தீட்சையும் பண்ணிச் சிவந்த தாமரைமலர்போன்ற திருக்கண்ணருளினாற்பார்த்துத் துன்பப்பிறப்பினாற்பட்ட புண்ணுடம்புத் துன்பமு மிருவினைத்துன்பமு முயிரைவிட்டு நீங்கும்படிக்கழகுபொருந்திய தாமரைமலர்போன்ற திருக்கைத்தலத்தைச் சிரசிலேவைத்தருளிக் கற்போன் றிருந்த நெஞ்சை யக்கினியைச் சேர்ந்த மெழுகுபோல வுருக்கித் திரிபதார்த்த மெய்த்தகைமைப் பொருள்களெல்லாம் விரித்தோதி யுபதேசித்தொற்றுமையாக வாகாயத்தைமறைத்த பூதவிருள்வடிவானது அந்தஆகாயத்திற் சிவந்தசூரியனுதையமானவுடனே பூதவிருட்பிரகாசமாய் மறைந்து நீங்கவாகாயஞ் சூரியவொளி வடிவாகிநின்ற முறைமைபோல வுபதேசித்த ஞானப்பிரகாசத்தைப்பற்றி மும்மலமுநீங்கி யான்மபோத மருளிலடங்கச்செய்து மலமான்மபோதத்தையும் பற்றுமற் றன்னு

டைய வநாதி நித்தியமுங் கெடாம லீதியாகநிறுத்தின நிலைமை யெம்மையிரட்சிக்க.

மேதக்கோர், செய்யுஞ்சரிதை திகழ்கிரியாயோகத்தா
லெய்துஞ்சீர்முத்திபத மெய்துவித்து - மெய்யன்பாற்
காணத்தகுவார்கள் கண்டாற்றமைப்பின்பு
காணத்தகுஞான நன்னெறியை - வீணே
யெனக்குத்தர வேண்டி யெல்லாப்பொருட்கு
மணக்குமலரயன் மால்வானோர் - நினைப்பினுக்குந்
தூரம்போலேயணிய சுந்தரத்தாளென்றலைமே
லாரும்படிதந் தருள்செய்த - பேராளன்
றந்தபொருளேதென்னிற் றான்வேறுநான்வேறாய்
வந்துபுணராவழக்காக்கி - முத்தியென்ற
னுள்ளமென்று நீங்கா தொளித்திருந்துதோன்றிநிற்குங்
கள்ளமின்றுகாட்டுங் கழல்போற்றி.

எ - து. உலகப்பற்றற மேம்பாட்டுடனே தாதமார்க்கஞ்சற்புத்திரமார்க்கஞ் சகமார்க்கஞ் சன்மார்க்கமென்னு நான்குவழியினுநின் றுண்மைச் சரிதை கிரியாயோகங்களை விதிதப்பாமல் நுட்டித்துச்செய்த வடியார்களுக்குச் சிறப்புமிருந்த பதமுத்தியான சாலோக சாமீப சாரூப மெய்தும்படி செய்வித்து அதனால் ஞானதாகமுற்ற வடியார்க ளநுக்கிரகத்தைப்பெற்று மெய்யன்பினாலே சிவரூபத்தி லான்மதரிசனைபண்ணிச் சிவதரிசனத்தி லான்மாவின்றன் னியல்பை யறிந்து பின்புபெத்தமுத்தி யிரண்டினு முபகரித்து இரட்சிக்கிற கர்த்தாவினுடைய கருணையைமறந்து நாமொரு முதலென்றிருந்தோமே யென்றலச்சைப்பட்டு நாணிப் பதைப்பறவருளினழுந்தி யிரண்டற் றநுபவிக்குஞ் சிவாநுபவத்தைத் தடுமாறியானாலுஞ் சிவசிவாவென்று நினையாத

வெணக்கும்வீணேயிரங்கியநுக்கிரகம் பண்ணவேண்டி வேதாகம
புராணசாத்திரங்களிற் சொல்லப்பட்ட வெல்லாப்பொருளுக்கு
மனத்துக்குத் தாமரை மலரி னெழுந்தருளி யிருக்கும்பிரமவிஷ்
ணுமுதலாகிய தேவர்கணிலைப்புக்குந் தெரியப்படாததூரம்போ
லே நின்றும் ஜடசித்துக்களிடத்தினு மணித்தாய் நிறைந்திருக்
கிற வழுகுபொருந்திய சீர்பாத கமலத்தை யடியேன் சிரசின்மீதி
ருந்து பிரகாசிக்கும்படிக்கு வைத்தநுக்கிரகம்பண்ணிப்பெரியம
காதேவரென்னும் பெயரையுடைய மறைஞான சம்பந்த ஞான
சாரியரெனக்கநுக்கிரகம்பண்ணினபொருளேதென்னிற்முன்வே
று நான்வேருய்வந்துபொருந்தின தில்லையென்னும்வழக்கையறி
வித் தநாதியேதொடுத்துன்னிடத்திலே யொளித்திருந்துநீ நம்
மைக்காணுதிருக்க நாமென்றுமுன்னைக்கண்டுகொண்டிருந்தோ
மென்கிற கள்ளத்தையிப்போதுயிர்க்குயிராய்ப் பிரகாசித்தறிவி
றறிவித்த பாதமானதெம்மையிரக்ஷிக்க.

வள்ளமையாற், றன்னைத்தெரிவித்துத்தன்றாளினுட்கிட
வென்னைத்தெரிவித்த வெல்லையின்கண்-மின்ஞரும் [ந்த
வண்ணமுருவ மருவுங்குணமயக்க
மெண்ணுங்கலைகால மெய்பொருளு-முன்னமெனக்
கில்லாமைகாட்டிப்பின் பெய்தியவாகாட்டியினிச்
செல்லாமெனாட்டுஞ் செயல்போற்றி,

எ - து. வளப்பமிகுந்த கிருபையினுற் கர்த்தா தன்னைத்தெ
ரிவித்துத் தன்பாததாமரையான் திருவருளுக்குள்ளே பிரியாம
லென்றுங்கிடந்தவென்னையுந் தெரிவித்தவெல்லைக்கண்மின்போ

ன்று தோன்றியழிகிறவண்ணத்தையுடையதேகமுந்தேகத்தை
ப்பொருந்திய குணமயக்கங்களு மறிவைவிளக்கப்பட்டகலையாதி
முதலாகியதத்துவங்களு முன்னில்லாதகேவலாவத்தையைமுன்
னேயறிவித்துப் பின்பு தேகமுதலிய கருவிகரணாதிகளுங் கூடி
ன சகலாவத்தையு மறிவித்து இனியருளைவிட்டுத் தேகமுதலான
கருவிகரணாதிகளிற் செல்லாத சுத்தாவத்தையுமறிவித்தசெயலெ
ம்மையிரக்ஷிக்க.

எல்லாம்போய்த், தம்மைத்தெளிந்தா ராய்த்தாமேபொ
யெம்மைப்புறங்கூறி யின்புற்றுச்-செம்மை [ருளாகி
ய விசாரம்பேசு மகம்பிரமக்காரர்
வெளியாமிருளில் விடாதே - யொளியாய்நீ
நின்றநிலையிலே நிகழ்த்தியொருபொருள்வே
றின்றியமையாமை யெடுத்தோதி - யொன்றாகச்
சாதித்துத்தம்மைச் சிவமாக்கியிப்பிறவிப்
பேதந்தனிலின்பப் பேதமுறாப்-பாதகரோ
டேகமாய்ப்போகாம லெவ்விடத்துங்காட்சிதந்து
போகமாம்பொற்றாளி னுட்புணர்த்தி - யாதியுட
னிற்கவழியா நிலையிதுவேயென்றருளி
யொக்கவியாபகந்தன் னுட்காட்டி - மிக்கோங்கு
மாநந்தமாக்கடலி லாராவமுதளித்துத்
தான்வந்துசெய்யுந் தகுதியினா - லூனுயிர்தான்
முன்கண்டகாலத்து நீங்காதமுன்னோனை
யென்கொண்டு போற்றிசைப்பேனியான்.

எ - து. எல்லாத் தத்துவங்களையும்-பொய்யென்றுகண்டு நீங்கித் தம்மைத்தெளிந்தோமென்று நமக்குமேலேவேறொருபொருளில்லையென்றுஞ் சைவசித்தாந்திகளுடனே கூடலாகாதவர்கமக்குப் புறம்பென்றும்பேசித் தன்னின்பத்தைத்தானே புசித்திருப்போமென்று மகிழ்ச்சியுற்றுச் செவ்விதானநிருவிகாரி நாமேயென்றுபேசி யகமே பிரமமென்னும் வாதிகள் தன்னையுமறியாமற் றலைவனையு மறியாமன் மயங்கிநிற்கிறவெளிபோன்றவிருளிலென்னைவிடாமல் ஞானசொரூபவொளிவடிவா யிப்போது நீங்கிற்கிற நிலையென்று நிகழ்த்தியிதற்குமேலே வேறொருபொருளின்றி யமையாமையு மெடுத்தோதி யான்மாவைச் சிவத்துடனேயொன்றாகும்படி சாதித்துத் தம்மைச்சிவமாக்கியிந்தப் பிறவிப்பேதமாகிய சரீரத்திலேதானே ஜீவன்முத்தித் தன்மையும் பரமுத்தித்தன்மையுஞ் சரியாகக்கண்டு வெற்றின்பமான சிவபோகம் புசியாமல் சமவாதம்பேசி யான்மசத்தியுடனேகூடி யின்பம் புசிப்போமென்கிறபாதகரோடுங்கூடி யேகமாய்ப் போகாமலெனக்கெவ்விடத்துங் குருலிங்கசங்கமாய்க் காக்ஷிகொடுத்து மேலானபோகமுண்டாகிற திருவருட்பாதத்திற் பிரியாம லுள்ளேயடங்கிக்கிடக்கும்படி பொருத்துவித்து ஞேயத்திலழுந்திநிற்குமழியாதசாயுச்சியநிலை யிந்தவருணிலையென்று விகற்பந்தோன்றாமலநுக்கிரகித்துத் தமதுபரிபூரண வியாபகத்துள்ளே யானுமொக்கவியாபித்து நிற்குந் தன்மையுங்காட்டி மிகுந்தோங்கியளவுபடாமனிறைந்துநின்ற தமது பேரானந்தத் திருவருட்கடலில் விளைந்துவாராதஞேயவமுதத்தைப் புசித்துக் களித்திருக்கும்படி தாமேயென்னைத்தேடிவந்துகொடுத்த பெருங்கருணைத்தகுதியினாலுனு

யிர்தானே முதன்மையென்று நின்றபெத்தகாலத்து மதற்குமுத ன்மையுங் கொடுத்து நீங்காமனின்ற முன்னோனை யெந்தவிதங் கொண்டு புகழ்ந்து போற்றுவேனியான்.

போற்றிதிருத்தில்லை போற்றிசிவபோகம்
போற்றியவன்மெஞ்ஞானப் புண்ணியநூல் - போ
வெம்பந்தவாழ்க்கைவிட வேறாய்வந்துண்ணின்
சம்பந்தமாமுனி பொற்றாள்.

போற்றிப்பஃறொடை மூலமும் உரையு

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.